Registered as a newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 16 வியாழக்கிழமை (29-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 54

# பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த இராஜினாமா!



## குண்டு தாக்குதல் பொறுப்பை ஏற்றார்

கொழும்பு, ஜனவரி 29

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று இராஜினாமாச் செய்தார். தலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்று தாம் இராஜினாமாச் செய்வதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிய இராஜினாமாக் கடிதத்தில் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலுக்கான பொறுப்பை ஏற்று அனுருத்த ரத்வத்த தமது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்யவேண்டும், என்று கோரி நேற்று முன்தினம் கொழும்பு ஹைட்பார்க்கில் ஐக்கிய தேசியக்கட்சி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரின் கொடும் பாவியையும் எரித்தனர்.

தலதா மாளிகை தாக்குதலை கண்டித்து நேற்று கொழும்புக் கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

இவற்றுக்கு மத்தியில் அனுருத்த ரத்வத்தவின் இராஜினாமா அறிவிப்பு வெளிவந்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர தின பொன்விழா வைபவத்தை கொழும்பில் நடத்த அரசாங்கம் முடிவு!

## தலதாமாளிகை குண்டுவெடிப்பின் எதிரொலி

கொழும்பு, ஜன. 29

தலதாமாளிகை குண்டு வெடிப்பை அடுத்து சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்களை கண்டியில் நடத்தும் திட்டத்தை அரசாங்கம் நேற்றுக் கைவிட்டது.

கண்டிக்குப்பதிலாக கொழும்பு, கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளு மன்றப் பகுதியில் பிரதான பொன்விழாக் கொண்டாட்டங்களை நடத்துவது என்று நேற்று முடிவு செய்யப்பட்டது

எனினும் சுதந்திர பொன் விழாக் கொண்டாட்டம் தொடர்பான மத வைபவங்கள் கண்டி தலதாமாளிகையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக நேற்று அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பில் ''மலையகத்தின் வரலாறுச் சிறப்பு மிக்க தலைநகரில் சுதந்திரப் பொன்விழா வைபவங்களை நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

அந்த நேரத்தில் குண்டுத் தாக்குதலால் தலதா மாளிகைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் தீர்வு யோசனை ஐ. தே. கட்சி நிராகரித்தது

### மாற்று யோசனை வழங்க முடிவு

கொழும்பு, ஜன. 29

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன் அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்புத் திருத்தம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தாது என்பதால் அதனை நிராகரிப்பது என்று ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு நேற்று முடிவுசெய்தது.

ஐ.தே.க.வின் நாடாளுமன்றக் குழு நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மியான்கல் குளம் முகாம் மீது புலிகள் தாக்குதல்

### 10 படையினர் பலி; 11 பேர் காயம்

வவுனியா, ஜன. 29

மட்டக்களப்பு — பொலன்னறுவை வீதியில் அமைந்துள்ள மியான்கல்குளம் இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் இரவு 9.16க்கு தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தினர்.

இத்தாக்குதலில் 10 படையினர் உயிரிழந்தனர், 11

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சங்குப்பிட்டி - திருமலை பகுதிகளில் கிபிர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாவட்டத்தில் சங்குப்பிட்டி — கல்முனைப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் முகாமும் — திருகோணமலை மாவட்டம் மொறவேவயில் உள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித்தேர்தல்முடிவு இன்று இரவே வெளிவரும்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாவட்டத்தில் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குமான தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன. என்று யாழ். தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

வாக்காளர்களை நேரத்துடன் சென்று வாக்களிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான வாக்களிப்பு அட்டைகள் மற்றும் வாக்குப் பெட்டிகள் நேற்றிரவு 7 மணிக்கு முன்பாக சகல வாக்களிப்பு நிலையங்களுக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்

### தேர்தல் குறித்து பலகல்ல செய்தி

யாழ்ப்பாணம், ஜன 29

''யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கும் இன்று நடைபெறும் தேர்தல் இலங்கை வரலாற்றில் முக்கிய மைல் கல்லாக அமைகிறது''

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபா உட்பட 26 பேருக்கும் மரண தண்டனைத் தீர்ப்பு!

### ராஜீவ் கொலை வழக்கில் சென்னை நீதிமன்றம் வழங்கியது

புதுடில்லி, ஜன. 29

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் உட்பட 26 பேருக்கும் நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

தீர்ப்பை வழங்கிய சென்னை சிறப்பு நீதிமன்ற நீதிபதி வி. நவநீதம் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைக்குத் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கமே பொறுப்பு என்றார்.

ஆறு ஆண்டு காலம் இரகசிய விசாரணை நடைபெற்றதன் பின்பு பாதுகாப்புக் கெடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்டி சம்பவத்தின் எதிரொலி

# பொலிஸ்மா அதிபரை நீக்க அரச எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 29

கண்டி தலதா மாளிகைக்கு உரிய முறையில் பாதுகாப்பை வழங்கத் தவறிய பொலிஸ்மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுருவை உடனடியாக அந்தப் பதவியில் இருந்து விலக்குமாறு கோரி மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்புவதென ஆளும் கட்சியைச் சேர்ந்த எம்பிக்கள் தீர்மானித்துள்ளனர்.

அந்த மகஜரில் தற்போது கையொப்பங்கள் பெறப்பட்டு வருவதாகவும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் விவாதம் நடைபெறவுள்ள பெப்ரவரி 6 ஆம் திகதி அந்த மகஜரை அவர்கள் கையாளிக்க உள்ளதாகவும் தெரியவருகிறது.

அந்த மகஜரில் கையொப்பமிட சில அமைச்சர்களும் விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் பொலிஸ் மா அதிபர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகிறார் என இதற்கு முன்னரும் பல தடவைகள் முறையிட்ட போதிலும் பொலிஸ் மா அதிபரை பதவி நீக்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியது எனவும் ஆளும் கட்சி எம்.பிக்கள் குற்றஞ்சாட்டியுள்ளதாக 'திவயின' செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ.10)

## பாலர் பாடசாலை

கொழும்புத்துறை, ஜன. 29

கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமூக நிலையம் நடத்தும் உதயதாரகை சிறுவர் பாடசாலை அண்மையில் செயற்பட ஆரம்பித்துள்ளது. (ஐ-30)

# வேலையற்ற பட்டதாரிகள் மட்டக்களப்பில் பிக்கெட்டிங்

மட்டக்களப்பு, ஜன. 29

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நேற்று பிக்கெட்டிங் போராட்டத்தில் ஈடுபட்டது.

மட்டக்களப்பு — காந்தி சதுக்கம், திருகோணமலை — மாகாண பிரதம செயலாளர் அலுவலக முன்றல், கல்முனை — பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாக நடைபெற்ற இந்தப் பிக்கெட்டிங்குகளில் 2 ஆயிரத்து 500 பட்டதாரிகள் கலந்து கொண்டனர். [இ 21]

## கண்ணீர் அஞ்சலி



### தர்மலிங்கம் சத்தியசீலன்

(கிளை முகாமையாளர், ப. நோ. கூ. ச. நீர்வேலி)

அவர்கள் 28-1-98 அன்று சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கிளைக்குழுவினர்,
வலி. கிழக்கு தென்பகுதி
(52969) ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி.

## நெல்லியடி மஹாத்மா வெண் திரையில்

30 - 01 - 98 முதல்
சரத்குமார்
தேவயானி
நடித்த
சூரியவம்சம்
காட்சிகள்: 10-30, 2-30
(சி/2738)

## மரண அறிவித்தல்கள்

### க. வி. சோமசுந்தரம்

மயிலிட்டியைச் சேர்ந்த க. வி. சோமசுந்தரம் 1998—01—19 இல் விசுவமடுவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், முருகவேள், நகுவேள், காலஞ்சென்ற பரமகுரு மற்றும் இன்பகுரு, லக்சுமிதேவி, தேசமலர், கனகராணி, சத்தியேஸ்வரி, சகுந்தலாதேவி, சித்திராதேவி, கனகாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், வேல்நாயகம், சித்திவிநாயகம், செல்லச்சாமி, [illegible], செல்வநாயகம், பாலநாதன், செல்வநாயகி, சிறீதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகா, இராஜசேகர், வானதி, பாமினி, தர்ஜினி, தனுஷன், சாந்தி, நிமலினி, ஜனகன், தட்சாயினி, துஷிகா, சோபிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12 ஆம் கட்டை, விசுவமடுவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
திருமதி சி. சோமசுந்தரம்
அம்மன் கோயில் வீதி,
கோண்டாவில்.
(52966)

### தருமலிங்கம் சத்தியசீலன்

(கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி)

முத்துமாரி அம்மன் வீதி, கோப்பாய் மத்தியைச் சேர்ந்த தருமலிங்கம் சத்தியசீலன் அவர்கள் 28-01-98 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னர் தருமலிங்கம் தவமணி தம்பதிகளின் ஏக புதல்வனும், தாயாவினிதேவியின் அன்புக் கணவரும், பிரஷாந் (மாணவன், யா/புனித பொஸ்கோ வித்தியாலயம்), திவேதிகா (மாணவி, யா/கோப்பாய், நாவலர் வித்தியாலயம்), ரவிஷங்கர் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28-01-1998 புதன்கிழமையன்று பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
சி. தருமலிங்கம் குடும்பம்
(52975)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

1996/ 97
கல்வியாண்டிற்கான
சித்த மருத்துவப் பிரிவுக்கு
புதியமாணவர்களை
அனுமதிப்பதற்கான
நேர்முகப் பரீட்சை

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கு 1998-01-05 இல் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்கத் தவறியவர்கள் 1998-03-02 இல் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. கல்விச் சான்றிதழ் (மூலப்பிரதி)
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப்பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம் (மூலப்பிரதி)
4. தேசிய அடையாள அட்டை

ஏற்கனவே, மேற்குறிக்கப்பட்ட விடயம் சார்பாகத் தொடர்புகொண்டவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

- பதிவாளர்

(சி/2742)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

1997 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த
யா/மட்டுவில் வடக்கு
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
மாணவர்களான

1. செல்வி விஜயரத்தினம் சாதனா — 108 புள்ளிகள்
2. செல்வி அருமைரத்தினம் ஜமுனா — 102 புள்ளிகள்
3 செல்வன் கந்தையா மணிதீபன் — 99 புள்ளிகள்

ஆகியோரையும்
யா/சாவகச்சேரி கச்சாய் வீதி
றோமன் கத்தோலிக்க
தமிழ்க் கலவன் பாடசாலை
மாணவர்களான

1. செல்வன் ஜெ. பஸ்ரியன் அருணோதயன்
2. செல்வன் சே. நெவில் தேவசேயன்
3. செல்வி உ. சுலக்ஸனா
4. செல்வி ஆர். ஜசிந்தா

ஆகியோரையும்

இம்மாணவர்களை ஊக்குவித்த அதிபர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களையும் துணை நின்ற பெற்றோரையும் பாராட்டுகின்றோம்.

டாக்டர் பே. பிலிப்ஸ் குடும்பத்தினர்
ஆரோக்கிய வாசா வைத்தியசாலை,
மட்டுவில் வடக்கு,
(சி/2744) சாவகச்சேரி.

## யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் கலந்துரையாடல்

மேற்படி பாடசாலையின் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்களை 1-2-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ். பிறேம்குமார்
(சி/2743) பெற்றோர் சார்பில்.

## வாழ்த்துகிறோம்

யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை
1997 புலமைப்பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தோர் விவரம்

★ ந. சுகதீபன் ★ ம. சுதர்சன்
★ ச. முகுந்தன் ★ இ. விஜியநிதி

இம் மாணவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு மிகக் கிட்டிய புள்ளிகளைப்பெற்ற மூன்று மாணவர்களையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

அத்துடன் இம் மாணவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[49936]

## மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

மீண்டும் யாழ். நகரில்!

# பொருளியல் வரதராஜன்

**A/L 2000, 99, 98, 97 DAY**

அனைத்து பிரிவுகளிற்கும் 31-01-98 இல் இருந்து அனுமதியினை பெற்றுக்கொள்ளவும்.

பொருளியற் கல்லூரி,
(யாழ். College of Commerce நிறுவனத்தின்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
- நிர்வாகி
(52973)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் விவகாரம் பற்றி கிளின்ரன் தமது உரையில் எதுவும் கூறவில்லை

வாஷிங்டன், ஜன. 29

**அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் நேற்று காங்கிரஸில் தமது வருடாந்த உரையை நிகழ்த்தினார். அனைவராலும் ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட அந்த உரையில் வெள்ளை மாளிகை பாலியல் விவகாரம் தொடர்பாக அவர் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.**

வெள்ளை மாளிகையில் உதவியாளராகப் பணிபுரிந்த மொனிக்க லுவின்ஸ்கி என்ற 21 வயதுப் பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்தார் என்றும்— அதனை மறைப்பதற்கு அவர் முயற்சித்தார் என்றும் கிளின்ரன் மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த விவகாரம் அமெரிக்க அதிபரின் அரசியல் எதிர்காலத்தையே ஆட்டம் காணச் செய்யும் அளவிற்கு விஸ்வரூபம் எடுத்துவரும் வேளையில் அதிபர் கிளின்ரன் அமெரிக்க காங்கிரஸில் நேற்று உரையாற்றினார். தம் மீதான செக்ஸ் குற்றச் சாட்டுக்கள் குறித்து தமது உரையில் கிளின்ரன் கருத்துத் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டதால் அந்த உரை உலகளாவிய கவனத்தை ஈர்த்தது. ஆனால் கிளின்ரன் அது குறித்து எதனையும் பிரஸ்தாபிக்காமலே தமது உரையை முடித்தார்.

ஐ. நாவுக்கு அமெரிக்கா செலுத்த வேண்டிய கடனைத் திருப்பிச் செலுத்துவது, சர்வதேச நாணய நிதியத்துக்கு கூடுதல் நிதி ஒதுக்குவது ஆகியவற்றுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு அவர் காங்கிரஸிடம் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்கப் பொருளாதாரத்தின் வலு குறித்து அதிபர் தமது உரையில் குறிப்பிட்ட போது காங்கிரஸ் உறுப்பினர்கள் எழுந்து நின்று கரகோஷம் செய்தனர்— என்று முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அமெரிக்கக் காங்கிரஸில் அதிபர் பில் கிளின்ரன் ஆற்றிய உரையின் முழு விவரமும் நேற்று இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (ஐ)



பாலியல் விவகாரத்தில் அமெரிக்க அதிபரை சிக்கவைத்திருக்கும் மொனிக்கா லுவின்ஸ்கி (வயது 24) என்பவர் இவர்தான். வெள்ளை மாளிகையில் உதவியாளராகப் பணியாற்றிய போது அதிபர் கிளின்ரன் இவருடன் உடல் உறவு கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

## மொனிக்காவின் ஆடைகள் டி. என். ஏ. பரிசோதனைக்கு

வாஷிங்டன், ஜன 29

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விவகாரம் சூடுபிடித்து வரும் இவ்வேளையில் உண்மையிலேயே கிளின்ரன் மொனிக்காவுடன் தொடர்பு கொண்டிருந்தாரா என்பதைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளும் வகையில் டி. என். ஏ. சோதனையை நடத்துவதற்காக மொனிக்காவின் உடைகள் சிலவற்றை சமஷ்டி புலனாய்வு நிபுணர்கள் கைப்பற்றியுள்ளனர்.

மொனிக்காவின் சில ஆடைகளில் விந்து தாதுக்களின் அடையாளம் இருப்பதாகவும் அவற்றை நிபுணர்கள் எடுத்துச் சென்றுள்ளதாகவும்—

அந்த ஆடைகளைப் பரிசோதனை செய்வதன் மூலம் அதில் உள்ள விந்து யாருடையது என்பதைக் கண்டு கொள்ளலாம் எனவும்—

கிளின்ரன் மீதான குற்றச் சாட்டுக்கு இது மிக அவசியமான சோதனை என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## கிளின்ரனுக்கு ஆதரவாக ஹிலாரி தொலைக்காட்சி மூலம் பிரசாரம்

### உண்மை நிச்சயம்வெளிவரும் என்கிறார் அவர்

வாஷிங்டன், ஜன. 29

பாலியல் விவகாரத்தில்சிக்கியுள்ள அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கு ஆதரவாக அவரது மனைவி ஹிலாரி தீவிரமாகப் போராடி வருகிறார்.

கிளின்ரனுக்கு ஆதரவாக அவர் அமெரிக்கத் தொலைக்காட்சி மூலம் தீவிர பிரசாரம் ஒன்றை நடத்தினார்.

மொனிக்கா விவகாரம் குறித்து தமது கணவரும் தாமும் விரிவாகப் பேசியுள்ளதாகவும் —

உண்மை வெளிவந்தே தீரும் என்பதால் மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் அவர் அந்த தொலைக்காட்சி உரையில் தெரிவித்தார். அச்சமயம் எதிரிகளின் முகாமுக்குள் நின்று போராடுவதுபோல் தொலைக்காட்சியில் ஹிலாரி கிளின்ரன் தோற்றமளித்ததாக பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

வெள்ளை மாளிகை செக்ஸ் விவகாரத்தில் சுதந்திரமாகச் செயற்பட்டு வரும் வழக்கறிஞர்கெனத் ஸ்ராரையும் அவரது குழுவினரையும் திருமதி ஹிலாரி தமது உரையில் கடுமையாகக் கண்டித்தார்.

அரசியல் நோக்கத்துக்காக தூண்டி விடப்பட்டவர் என்று வழக்கறிஞர் கெனத் ஸ்ரார் அவர்களை ஹிலாரி சாடினார்.

எனது கணவரின் வலதுசாரி எதிர்ப்பாளர்களுடன் அவர் கூட்டு வைத்துள்ளார். எனது கணவருக்கு எதிராக ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்த தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வதில் சுமார் நான்கு ஆண்டுகளை அவர் செலவழித்துள்ளார் என்றார் ஹிலாரி. (ஐ)

உலக அரங்கில்

### ஊழல் விவகாரத்தின் எதிரொலி

## ஜப்பான் நிதியமைச்சர் ராஜினாமா செய்தார்

நிதி அமைச்சின் அதிகாரிகள் இருவர் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து ஜப்பானிய நிதி அமைச்சர் ஹிரோஷி மிஷ்ஸ்கா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இந்த ஊழல் தொடர்பாக ஜப்பானிய புலனாய்வு அதிகாரிகள் ரோக்கியோவில் உள்ள நான்கு பிரதான வங்கிகளில்திடீர் சோதனை நடத்தினர்.

ஊழல் விவகாரம் தொடர்பான தகவல்களைத் தருவதற்குப் பதிலாக சம்பந்தப்பட்ட வங்கிகளிடம் இருந்து உபசரிப்புக்களைப் பெற்றதாக இந்த இரு நிதி அமைச்சு அதிகாரிகள் மீதும் குற்றஞ் சாட்டப்பட்டது.

லஞ்ச ஊழல் விசாரணை ஆரம்பமானது முதல் நிதி அமைச்சர் பதவி விலகவேண்டும் என்ற அழுத்தம் அதிகரித்து வந்தது. அதனையடுத்தே நிதி அமைச்சர் ஹிரோஷி தமது பதவி விலகல் கடிதத்தை ஜப்பானியப் பிரதமரிடம் கையளித்துள்ளார்.

## தி. மு. க. - பாட்டாளி தொண்டர்கள் மோதல்

சென்னை, ஜன. 29

திருவண்ணாமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வேட்புமனுத்தாக்கல் செய்ய ஊர்வலமாகச் சென்றபோது பாட்டாளி மக்கள் கட்சிக்கும் தி. மு. க. தொண்டர்களுக்குமிடையே பெரும் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலவரத்தில் வீட்டு வசதித்துறை அமைச்சர் கோ. பிச்சாண்டியின் அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் இருதரப்பு கட்சிக் கொடிக் கம்பங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-9)

## மியான்மார் விமானம் விபத்து

ரங்கூன், ஜன. 29

மியான்மாரில் (பர்மா) இடம் பெற்ற விமான விபத்துச் சம்பவத்தில் ஏழு பயணிகள் உயிரிழந்தனர். மியான்மார் ஏயர்வேய்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானம் தான்வே நகருக்கு அருகே வீழ்ந்து நொறுங்கியது.

சுமார் 44 பயணிகளுடன் அந்த நகரில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் இந்த விபத்து நேர்ந்தது. விமானத்தில் இருந்த பயணிகளில் பெரும்பாலானோர் உயிர் தப்பினர். (ஐ)

## 73 பயணிகளுடன் கப்பல் மூழ்கியது!

### 23 பேர் காப்பாற்றப்பட்டனர்

ஜகார்த்தா, ஜன. 29

சுமாத்திராவின் ரியாத் தீவுகளுக்கு அப்பால் பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கி விட்டது. சுமார் 70 பயணிகளுடன் கடலில் மூழ்கிய அக்கப்பலைத் தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாக ஜகார்த்தாவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடலில் மூழ்கிய பயணிகளில் 23 பேர் அவ்வழியாக வந்த இழுவைப்படகு ஒன்றின் உதவியால் மீட்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர்த் துறைமுகங்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் கடுங் காற்று, கடற் கொந்தளிப்பு காரணமாகவே இக்கப்பல் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## அரசியல் கைதிகளை விடுவிக்க பாப்பரசர் கோரிக்கை

கியூபாவில் உள்ள அரசியற் கைதிகளை விடுதலை செய்யுமாறு பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசியற் கைதிகளை விடுதலை செய்வது கியூபாவுக்கு உலகத்துடனான இணக்கப்பாட்டுக்கு வழி வகுக்கும் என்று அவர் சொன்னார்.

கியூபா விஜயத்தின் போது சந்த கிளாரவில் திறந்த வெளி ஆராதனையில் பாப்பரசர் உரையாற்றினார். அந்த வைபவத்தில் உரையாற்றிய கியூபாவின் அதி மேற்றிராணியார் கியூப அரசாங்கத்தை வன்மையாகச் சாடினார். (ஐ)

## மகாராணி மீது எகிப்தில் வழக்கு

கெய்ரோ, ஜன. 29

இளவரசி டயானாவை திட்டமிட்டுக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டி பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர், மகாராணி எலிஸபெத் ஆகியோர் மீது எகிப்திய சட்டத்தரணி ஒருவர் கெய்ரோ நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இளவரசி டயானா ஒரு முஸ்லிமைக் காதலித்தார் என்பதற்காக அவரைத் தீர்த்துக் கட்ட பிரிட்டிஷ் அரச குடும்பமும்; அரசாங்கமும் முடிவு செய்ததாகத் தெரிவித்து நபி அல்வஹ்ஷ் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இவரது வழக்கைத் தொடர்வது சம்பந்தமான முடிவு எடுப்பதை நாளை வியாழக்கிழமை வரை கெய்ரோ நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. (ஐ)

## தாக்குதலுக்கு முன் இறுதி அவகாசம் ஈராக்கிற்கு அமெரிக்கா வழங்கும்

### படைகள் நெருங்குகின்றன

வாஷிங்டன், ஜன. 29

வளைகுடாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படைகள் ஈராக்கிற்குச் சமீபமாக நிலைகளை நகர்த்தி வருகின்றன.

இராஜதந்திர ரீதியிலான இறுதிக்கட்ட முயற்சிகளை அமெரிக்கா தற்போது மேற்கொண்டுள்ளது. இதன் பின்னர் ஈராக்கிற்கு இறுதிக் கால அவகாசம் ஒன்று வழங்கப்படும். அதன் பின்னரே தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் நியூயோர்க் டைம்ஸுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய விரிசல் இராணுவத் தாக்குதல் ஒன்றுக்குச் சாத்தியமான சூழலையே ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

முஸ்லிம்களின் புனித மாதமான றம்ழான் நோன்புக் காலம் நாளை மறுதினம் முடிவடையவுள்ளதால் அமெரிக்காவின் தாக்குதல் எந்நேரமும் நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைகழகத்துக்கு 664 மாணவர்கள் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 29

1997 — 98 கல்வியாண்டுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் 664 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

பௌதிக விஞ்ஞானத்துக்கு 66 பேரும், உயிரியல் விஞ்ஞானத்துக்கு 100 பேரும், முகாமைத்துவத்துக்கு 89 பேரும், வர்த்தகத்துக்கு 68 பேரும், விவசாயத்துக்கு 35 பேரும், கலைக்கு 264 பேரும் அனுமதி பெற்றுள்ளனர்.

இதேவேளை விசேட அனுமதியின் கீழ் கலைத்துறைக்கு மேலதிக அனுமதியும் கிடைக்கவுள்ளது. சமஸ்கிருதம், வரலாறு, புவியியல், நாடகமும் அரங்கியலும், ஆங்கிலம், மொழியியல், சங்கீதம், நடனம், இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் போன்ற துறைகளுக்கான விசேட அனுமதிகள் விரைவில் வழங்கப்படும்.

விசேட ஏற்பாட்டின் கீழ் ஊனம் அடைந்தவர்கள், தேசிய மட்டத்தில் விளையாட்டு மற்றும் துறைகளில் சிறப்பு நிலை எய்தியவர்கள், ஆங்கிலத்தை ஒரு பாடமாக வெளிவாரியாகக் கற்று, பொதுக்கலைத் தேர்வில் சித்தி எய்திய ஆசிரியர்கள் போன்றவர்களுக்கான அனுமதி சிறிது காலத்தின் பின்னர் வழங்கப்படும் என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்றோர் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்வதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும். குறிக்கப்பட்ட காலத்திற்குள் பதிவு செய்யப்படாமலிருக்கும் வெற்றிடங்கள் குறித்து மானிய ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டு அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் — என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுவாக பௌதிக விஞ்ஞானம், உயிரியல், விவசாயம் ஆகிய துறைகளில் வெற்றிடங்கள் வருவதும் மருத்துவம், பொறியியல் துறைகளில் கற்கை நெறி செய்ய வேண்டும் என்று அடுத்த பெறுபேறுகளைப் பார்த்து பதிவு செய்யாமல் இருப்பதும் வழமையானது.

இந்த வெற்றிடங்கள் குறிக்கப்பட்ட காலத்திற்குள் நிரப்பப்படாது விட்டால் மானிய ஆணைக்குழுவுக்கு அறிவித்து நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கலை முகாமைத்துவ துறைகளில் வெற்றிடங்கள் ஏற்படுமிடத்து அவை அறிவிக்கப்பட்டு அதற்குரிய இடங்கள் நிரப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1997, 98-ம் கல்வியாண்டுக்கு அனுமதி பெற்ற மாணவர்களின் பெயர்ப் பட்டியல் யாழ். பல்கலைக்கழக விளம்பரப் பலகையில் போடப்பட்டுள்ளது.

சித்த மருத்துவம், சங்கீத, நடனமானி கற்கை நெறிகளுக்குரிய மாணவர் தேர்வு விரைவில் யாழ். பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் என்றும் துணைவேந்தர் தெரிவித்தார்.

(ஐ-5)

# களுத்துறைச் சிறையில் நடந்த பதிவுத் திருமணம்

கொழும்பு, ஜன. 29

சிறை அதிகாரிகளின் அனுமதியுடன் களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த செவ்வாயன்று விடுதலைப் புலி சந்தேக நபர்கள் இருவருக்கும் பதிவுத் திருமணம் நடைபெற்றதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணி மண்டுவான் பகுதியைச் சேர்ந்தவரும் தற்போது களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவருமான ஜெ. ஜெயகுமார் என்பவரே மணமகன் ஆவார். நெடுங்கேணியில் அதே இடத்தைச் சேர்ந்தவரும், தற்போது கந்தொடவில புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவருமான ஜெ கவிதா என்பவரே மணமகள் ஆவார்.

இவர்கள் இருவரும் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினர்களாக இருந்தனர் எனவும் பின்னர் அதிலிருந்து விலகி வவுனியா தடுப்பு முகாமில் இருந்தபோதே இவர்கள் இருவருக்கும் காதல் உருவானதெனவும் அவ்வேளையிலேயே இவர்கள் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை அதிகாரிகள், பத்திரிகையாளர் முன்னிலையில் இவர்களது பதிவுத் திருமணம் இடம்பெற்றது. சிறைச்சாலை அதிகாரிகள் சிற்றுண்டி வழங்கினர். பதிவுத்திருமணத்தின் பின்னர் மணமகன் களுத்துறை சிறைச் சாலையில் தங்கவைக்கப்பட்டார். மணமகள் கந்தொடவில புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஐ-10)

# மேலும் குண்டுத் தாக்குதல்கள் சுதந்திரதினத்துக்கு முன் நடக்கலாம்

கொழும்பு, ஜன 29

கண்டியில் நடந்த குண்டுத் தாக்குதல் சம்பவத்தை இறுதிக் குண்டுச் சம்பவம் எனத் தீர்க்கமாகக் கூற முடியாது. சுதந்திரதினத்துக்கு முன்னர் புலிகளால் பரீட்சிக்கப்பட்ட ஒத்திகையாகவும் இது அமையலாம்.

'திவயின' பத்திரிகையில் வெளியாகியுள்ள கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு இன்னும் 10 நாள்கள் இருக்கும் போதே இவ்வாறான ஒரு பயங்கரம் நிகழ முடியுமாயின் அடுத்து என்ன நடக்கும் என்ற அச்சம் உருவாவது இயற்கையே.

வடக்குக் கிழக்கில் யுத்தம். அதற்கிடையில் தேர்தல்கள். பாதுகாப்புப் படையினர் புலிகளுடன் போரில் ஈடுபட்டு வரும் அதே வேளையில் நாட்டின் ஏனைய பகுதிகளில் சுதந்திர தினக் கொண்டாட்டம் தொடர்பான பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவம் தலையிட்டு இருக்காவிடின் அதைவிட அதிகளவு அழிவுகள் ஏற்பட்டிருக்க சில வேளைகளில் வாய்ப்புகள் இருந்திருக்கும். போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டாலும் ஆகக் குறைந்தது சந்தேகத்திற்கிடமான இடங்களிலுள்ள கட்டடங்கள் அனைத்தையும் பாதுகாக்க பொலீசாரையும், இராணுவத்தினரையும் ஈடுபடுத்துவது என்பது முடியாத காரியமாகும். இருப்பினும் கடந்த ஞாயிறன்று வெடித்த குண்டுச் சம்பவத்தை இறுதிக் குண்டுச் சம்பவம் எனத் தீர்க்கமாகக் கூறமுடியாது.

சுதந்திர தினத்திற்கு முன்னதாக விடுதலை புலிகளால் பரீட்சிக்கப்பட்ட ஒத்திகையாகவும் இது அமையலாம்.

அவ்வாறாயின் புலிகளின் அடுத்த இலக்கு எது என்பது குறித்து நாம் விழிப்புடன் செயல்பட வேண்டும். —என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# வவுனியா வளாகத்துக்கு 74 மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்துக்கு இவ்வருடம் 74 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

வவுனியாவில் இயங்கி வந்த இணைந்த பல்கலைக்கழகம் யாழ் பல்கலைக்கழக வளாகமாக அமைக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக இவர்கள் அங்கு அனுமதி பெறுகின்றனர்.

இவர்களில் 35 பேர் முகாமைத்துவத்துக்கும், 31 பேர் பிரயோக விஞ்ஞானத்திற்கும், மூவர் பௌதிக விஞ்ஞானத்திற்கும், எட்டுப் பேர் உயிரியலுக்கும் அனுமதி பெற்றுள்ளனர்.

வவுனியா வளாகத்தில் பிரயோக விஞ்ஞானம், வர்த்தகக் கல்வி ஆகிய இரு பீடங்கள் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [ஐ 5]

## சமய சந்நிதியில்

கொழும்புத்துறை, ஜன. 29

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி அருள்மிகு ஸ்ரீமுருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 30 மணிக்கு பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் பேரவையின் ''ஞானச் சுடர்'' மாதாந்த மலர் வெளியீட்டு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

(ஐ 30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன 29

மல்லாகம் சாளம்பை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேல் முருக மூர்த்தி ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக நிகழ்வாக எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.36 மணி முதல் 10.36 மணிவரை முருகப் பெருமானுக்கும் ஏனைய மூலமூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜன. 29

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ சாந்தி துர்க்கை அம்மன் கோயில் அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகம், பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். [illegible] திகதி உற்சவம் முடிவடையும். (ஐ-30)

## தலதா மாளிகை

# புனரமைப்புப் பணியில் துறைமுக அதிகார சபை

அண்மையில் குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த தலதா மாளிகையின் பதிரிப்பு புனரமைப்பு வேலைகள் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் பணிப்புரையின் பேரில் துறைமுக அதிகார சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட நடவடிக்கைக் குழுவினர், மகாநாயக்க தேரர்கள், தொல்பொருளியல் திணைக்களம், தியவடன நிலமே ஆகியோரின் ஆலோசனைக்கேற்ப புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பால் சேதமடைந்த தலதா மாளிகையையும் சுற்றுப்புறங்களையும் கடந்த 26 ஆம் திகதி அமைச்சர் அஷ்ரப் பார்வையிட்டார். அவர் கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் காயமடைந்தவர்களையும் சென்று பார்த்தார்.

காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா வரை நஷ்டஈடு வழங்கவும், மரணமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாப்படி வழங்கவும் அவர் புனர்வாழ்வு அதிகாரசபைக்குப் பணிப்புரை விடுத்தார்.

இவற்றுக்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களையும் காயமடைந்தவர்களுக்கு வைத்தியசாலையில் வைத்து அமைச்சர் வழங்கினார்.

(ஐ 9)

# 'கெயர்' நிறுவன ஆதரவில் உடுவிலில் வயல் விழா

வலிகாமம்தெற்கு, ஜன. 29

உடுவில் வடக்கு விவசாயிகள் சம்மேளனம், சர்வதேச கெயர் நிறுவனத்துடன் இணைந்து கடந்த திங்கட்கிழமை காலை உடுவில் கிழக்கு நாச்சிமார் கோயிலடியில் வயல் விழாவைச் சிறப்பாக நடத்தியது.

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர், மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர், வலிகாமம் தெற்கு பிரதேச செயலகதிட்டமிடல் அதிகாரி, விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர் (பயிற்சி), விவசாய திணைக்கள உதவி ஆணையாளர் (விரிவாக்கம்), உலக உணவு பாதுகாப்பு நிறுவன யாழ். மாவட்ட பிரதிநிதி, அரச சார்பற்ற இணையங்களின் யாழ். மாவட்ட பணிப்பாளர், விவசாயத்திணைக்களப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் விரிவாக்க உத்தியோகத்தர், சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர், உடுவில் வடக்கு கிராம சேவையாளர் உட்பட விவசாயப் பெருமக்கள் பலரும் இவ்வயல் விழாவில் கலந்து கொண்டனர்.

உடுவில் வடக்கில் தெரிவு செய்யப்பட்டு விசேட பயிற்சி பெற்ற நான்கு விவசாயிகளுடைய வயல்கள், [illegible]படி பிரமுகர்களால் பார்வையிடப்பட்டன. (ஐ-154)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அருணாசலம் மகாதேவா

(இலங்கை மின்சாரசபை, சாவகச்சேரி)

அன்னை மடியில்: 1948 01-05

ஆண்டவன் அடியில்: 1997-01-29

ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

மனைவி: மனோகரிதேவி

மகள்: முரளினி

மகன்மார்: நடனதேவன், திவாரகன்.

(சி/2698)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தங்கத்தில் மாளிகை கட்டினாலும் காப்பாற்றாவிடில் பயனில்லை

### தியவதன நிலமே கூறுகிறார்

கண்டி, ஜன. 29

"தலதா மாளிகையை தங்கத்தினால் கட்டினாலும் பௌத்த மக்கள் ஒன்றிணைந்து அந்த மாளிகையைக் காப்பாற்ற முடியாவிடில் பயன் இல்லை."

குண்டுத் தாக்குதல் குறித்துக் கருத்து வெளியிடுகையில் தலதா மாளிகையின் தியவதன நிலமே ரஞ்சன் விஜயரத்தின மேற்கண்டவாறு கூறினார்.

"இந்தோனேஷியாவிலுள்ள பொறோபுதூர் என்றஇடத்திலுள்ள உலகிலேயே பெரிய புத்தரின் சிலை சிதைக்கப்பட்டு விட்டது.

"பாகிஸ்தானில்பௌத்தமதம் அழிந்து வருகிறது. பங்களாதேஷில் பௌத்தமதம் விரட்டப்படுகிறது. பண்டைய பௌத்த நாடுகளில் பௌத்தமதம் அழிந்து வரும் நிலைமை உருவாகி வருகிறது. எமது மூதாதையர்களான பௌத்தர்கள் மலர் இட்டு பூஜிந்த தலதா மாளிகை இன்னும் சிறிது காலத்தில் இல்லாமற் போகக் கூடும், நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இந்தப் புனித சின்னத்தைப் பாதுகாக்கத் திரள வேண்டும்."

இப்படி ரஞ்சன் விஜயரத்ன மேலும் கூறினார். (இ-10)

# அரசின் உத்தரவால் புலிகளுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாது

### கூட்டணி எம்.பி. ஜோசப் பராராஜசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 29

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசு விதித்துள்ள தடை உத்தரவு அந்த இயக்கத்தின் போராட்டத்துக்கு எத்தகைய பாதிப்புகளையும் ஏற்படுத்தி விட மாட்டாது.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற குழுத் தலைவர் ஜோசப் பராராஜசிங்கம் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீது அரசு விதித்துள்ள தடை குறித்து உதயன் செய்தியாளர் அவருடன் தொடர்பு கொண்ட போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மறைந்த ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பதவிக் காலத்தில் கூட புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் பாதிப்புகள் எதுவும் ஏற்பட்டதாக இல்லை.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் கூட புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தத் தடை காரணமாக புலிகளுக்குப் பாதிப்பு எதுவும்ஏற்பட்டதாக இல்லை.

அரசியல் கட்சி ஒன்றின் மீது தடை விதிக்கப்பட்டிருந்தால் அக் கட்சி தனது செயற்பாடுகளை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும். ஆனால் போராளிக் குழு ஒன்றுக்கு தடை விதிப்பு மூலம் அத்தகைய பலனையும் எதிர்பார்க்க முடியாது.

சர்வதேச நாடுகள், எதிர்க் கட்சித் தலைவர், ஜனாதிபதி உட்பட சகல தரப்பினரும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில் திடீர் எனப் பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு முழுமையான அரசியல் தீர்வொன்றுக்குப் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைக்கான மற்றுமொரு தடையாகவும் இது அமைந்துள்ளது.

அரசு தீர்க்கதரிசனமான முறையில் நிலைப்பாடுகளை எடுப்பதுதான் இன்றைய தேவை ஆகும்.

தடை உத்தரவு தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை.

இப்படி அவர் கூறினார். (இ-21)

### புலிகளின் நடவடிக்கைகள் குறித்து

# வெளிநாடுகளை அரசு எச்சரிக்குமாம்

விடுதலைப் புலிகளை அரசு தடைசெய்துள்ளதால் வெளிநாடுகளில் இயங்கும் புலிகளின் உறுப்பினர்கள் குறித்து அந்நாடுகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இலங்கை அரசு கோரிக்கை விடுக்கவுள்ளது.

பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ-3-10)

# 325 மாணவர்கள் மஹாபொல பெற்றனர்

யாழ். பல்கலைக் கழகத்தில் 325 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில் சான்றிதழ்களும், காசோலைகளும் வழங்கப் பட்டன.

மஹாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பல்கலைக்கழக பீடாதிபதிகள், பதிவாளர் உட்பட பலரும் அதில் கலந்து கொண்டனர். (ஐ-5)

# முறைப்பாடு செய்வோருக்கு வசதியாகக் கடித உறைகள்

### கண்காணிப்பு நிலையம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 29

தேர்தல் வன்செயல் தொடர்பாக முறைப்பாடு செய்பவர்களுக்கு வசதியாக தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் பின்வருவோரிடம் முத்திரை பதித்த கடித உறைகளை வழங்கியுள்ளது.

முறைப்பாடு செய்பவர்கள் குறிப்பிட்ட முகவரிகளில் கடித உறைகளைப் பெற்று அதன் மூலம் தமது முறைப்பாடுகளை அனுப்பி வைக்கலாம் என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

கடித உறைகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் விவரம்:

★ ரி. சண்முகநாதன் — கிராம உத்தியோகத்தர், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

★ சிவகுமார் ஸ்ரோர்ஸ்— ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜெயக்கொடி— ஈ. பி. ஆர். எல். எவ். வேட்பாளர் குருநகர், யாழ்ப்பாணம்.

★ டாக்டர் குணசீலன் — ஈ. பி. டி. பி. அலுவலகம், யாழ்ப்பாணம்.

★ தாஸ் — ஈ. பி. டி. பி. அலுவலகம், குருநகர்.

★ இராமமூர்த்தி, இராமேஸ்வரன் — சுயேச்சைக் குழு I.

★ திருமதி ச. யோகேஸ்வரன் — தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம், யாழ்ப்பாணம்.

★ எம். கே. சிவாஜிலிங்கம் — ரெலோ அலுவலகம், யாழ்ப்பாணம்.

★ த. சித்தார்த்தன் — புளொட் அலுவலகம், யாழ்ப்பாணம்.

★ சுரேஷ் பிரேமச்சந்திரன் — ஈ. பி. ஆர். எல். எவ். அலுவலகம், யாழ்ப்பாணம்.

★ பி. லிங்கநாதன் — புளொட் அலுவலகம், நெடுந்தீவு.

★ மோகன்— ஈ. பி. டி. பி. அலுவலகம், நெடுந்தீவு.

★ சின்னத்தம்பி பரமசாமி — பிரதம எழுதுவினைஞர், நெடுந்தீவு.

★ உதவித்தபால் அதிபர்— தபாலகம், சங்கானை.

★ தபால் அதிபர் — தபாலகம், சாவகச்சேரி.

★ சேனகா சமரசிங்க — பஸ்ரியன் சைனீஸ் ரெஸ்றோறன்ஸ் விடுதி, 37, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

★ பென்சமின் — சுது நெலும், யாழ்ப்பாணம். (இ-5)

# சேவைநலன் பாராட்டு விழா

சண்டிலிப்பாய், ஜன. 29

மானிப்பாய்இந்துக்கல்லூரியின் எட்டு வருடகாலம் அதிபராக கடமையாற்றி தமது 60— ஆவது வயதில் அடுத்த மாதம் 7 ஆம் திகதியன்று ஒய்வு பெறவுள்ள செ. கே. சிவராஜனுக்கு கல்லூரி பெற்றோர் சங்கத்தினர் எதிர் வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் சேவைநலம் பாராட்டு விழா நடத்தவுள்ளனர். கல்லூரி மண்டபத்தில் இவ் விழா நடைபெறவுள்ளது. (ஐ-135)

# பாடசாலை நூலகங்களை விரிவாக்க ஏற்பாடுகள்

வலிகாமம் தெற்கு, ஜன. 29

நூலகவசதி உள்ள பாடசாலைகளில் அவற்றை மறுசீரமைக்கும் படியும், நூலக வசதியற்ற பாடசாலைகளில் நூலகத்தினைத் தொடங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும் படியும் பாடசாலை அதிபர்களுக்கு யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவுறுத்தியுள்ளார்.

பாடசாலை நூலக வசதிகளை விரிவாக்குவது தொடர்பாக கல்வித்திணைக்களத்தினால் தேசிய திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் உள்ள நூலக வசதிகளை விருத்தி செய்வதற்கு பாடசாலை மட்டத்தில் பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்புடன் செயற்றிட்டங்கள் தொடங்கப்பட உள்ளன.

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நூலகங்கள்மூலம் உசாத்துணை வழங்குவதுடன் புத்தகங்களை மட்டுப்படுத்திய முறையில் இரவல் கொடுப்பதன் மூலம் மாணவர்களிடத்தே 'கற்கக் கற்றல்' அனுபவத்தினை ஏற்படுத்த முடியும் எனவும் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

# கூட்டுறவு சமாசத்துக்கு வந்த பொருளுக்கு விலை நிர்ணயம்

அரியாலை, ஜன. 29

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் கூட்டுறவு சமாசம் 'மேக்ஸ் ஹண்டி' கப்பலில் கப்பல் கட்டணம் இன்றி ஐம்பது வகையான உணவுப் பொருள்களை முதற்கட்டமாக எடுத்து வந்துள்ளது.

இப்பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டு அரிசி கிலோ 28 ரூபாவாகவும், திட்டல் பச்சைஅரிசி கிலோ 29 ரூபாவாகவும், மல்லி கிலோ 90 ரூபாவாகவும் சன்லைட் சோப் ஒன்று 9.75 சதமாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதேசமயம் "மேக்ஸ் ஹண்டி" கப்பலில் வந்த இப்பொருள்களை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பகிர்ந்து அளிப்பதற்கான ஏற்பாடுகளை சமாசம் மேற்கொண்டு வருகின்றது (ஐ-17)

# மதுபோதையில் இருவர் சூட்டுக்குப் பலி!

### திங்கள் இரவு கிரானில் சம்பவம்

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, கிரான் என்னுமிடத்தில் கடந்த திங்கள் இரவு இருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியானார்கள்.

மதுபோதையில் வீதியில் இவர்கள் காணப்பட்டுள்ளார்கள். கே. செல்வராஜா (38), எஸ். சிவபாலன் (31) ஆகியோரே பலியானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதே நேரம் அன்றிரவு கிரான் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வீடொன்றில் விழுந்து எஸ். பார்வதி (65) என்ற மூதாட்டி கொல்லப்பட்டார். (ஐ-21)

# சிறுவர்களைப் பிச்சைஎடுக்க வைப்பதற்கு கடும் தண்டனை

கொழும்பு, ஜன. 29

15 வயதிற்குட்பட்ட சிறுவர்களைப் பிச்சை எடுப்பதில் ஈடுபடுத்துவது, பஸ், ரயில் மற்றும் அங்காடிகளில் பாடவைப்பது போன்ற குற்றங்களில் ஈடுபடுவோருக்கு ஆகக் கூடுதலாக 5 ஆண்டுகள் தண்டனை வழங்கும் விதத்தில் குற்றவியல் தண்டனைச் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறுவர் தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கு அமையவே இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன என சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்தார். (ஐ-10)

### யாழ். மாவட்டத்தில்

# பழப்பயிர்ச் செய்கை குறித்து பிரான்ஸ் நிபுணர்கள் ஆய்வு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். மாவட்டத்தில் கூடிய பயன்தரக் கூடிய பழவகைகளையும் மற்றும் விவசாயப் பயிர் வகைகளையும் உற்பத்தி செய்வது தொடர்பான ஆய்வு நடவடிக்கைகளில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வறுமை ஒழிப்புக்கான தொண்டர் நிறுவனம் ஒன்றின் இரு பிரதிநிதிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள இந்த தொண்டுநிறுவனத்தின் பிரதிநிதிகளான இமானுவேல் வீவர்திருமதி பிறங்கோய்ஸ் ஜேக்கப் ஆகியோரே இந்த ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். விவசாயத் திணைக்களம், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், வலி. வடக்குப் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றிற்கு நேரில் சென்று இது தொடர்பான ஆலோசனைகளை இவர்கள் பெற்றுள்ளனர்.

நவீன பழவகை உற்பத்தி விவசாய பயிர்களின் உற்பத்திகளுக்குத் தேவையான உபகரணங்களை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் இந்நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது. (ஐ-5)

# சமயச் சொற்பொழிவு

கொழும்புத்துறை, ஜன. 29

ஏழாலை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் கோயிலில் நடைபெற்று வரும் உற்சவத்தின் போது தினசரி காலை 10-30 மணி தொடக்கம் 11-00 மணி வரை சிவானந்த வாரிதி சிவத்திரு. வ. குமாரசாமி ஐயர் "பட்டருக் கருளிய பராபரை" என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவாற்றி வருகிறார். (ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பெருமாள் இராசமணி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி என்ற முகவரியையுடைய தேசிய (418400323V), விசேட அடையாள அட்டைகள் யாழ். பஸ் நிலையத்திற்கும் ஹற்றன் நஷனல் வங்கிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். வினோ நகைப் பூங்கா, 185, கஸ்தூரியார் வீதியில் ஒப்படைக்கவும். (52945)

மயில்வாகனம் கொன்சலினா என்பவரது தேசிய அடையாள அட்டையும் (797532223V), விசேட அடையாள அட்டையும் (0903006896) 27-01-98 செவ்வாய்க்கிழமை சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காட்டுக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பழைய பொலீஸ் நிலைய ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (52957)

### வினாத்தாள்

25-1-98 இல் நடைபெற்ற 12 ஆம் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ். நகர். [52902]

### A/L PHYSICS

உங்கள் பௌதிகவியல் வகுப்புக்களுக்கு தனித்துவமான ஆசிரியர் விஜயகுமாரன் B. Sc (Special) தொடர்புகட்கு: இல. 10. முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி. அல்லது S வரதபாஸ்கரன் கட்டப்பிராய் (வட்டக்குளம் அருகில்). [52867]

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற விக்னேஸ்வரன் ஆச்சாரி அவர்களால் ஆங்கிலம் பேச முறையாக பயிற்சி கொடுக்கப்படுகிறது 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [52962]

### இலகு திருமண சேவை

இலங்கையில் திருமணம் செய்யும் தகைமையுடைய பணமகன்கள் பிறந்தவாண்டுகள் Denmark 1959, Norway 1963, Swiss 1964, 1967, Germany 1967 (பண்ணாகம்), 1958, Uk 1959, 1957 தொடர்பு: ஞாயிறு காலைகளில் துரைவிமலா 958/8, K. K. S. வீதி, யாழ். நாச்சிமார் கோவிலடி. (52959)

## அகதி முகாம் சுற்றி வளைப்பு

வவுனியா நகரில் உள்ள சைவப்பிரகாச வித்தியாசாலை அகதி முகாம் கடந்த திங்கள் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

இந்த சுற்றி வளைப்பில் 4 பேர் கைது செய்யப்பட்டதாக வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3)

## ஐ. நா. செயலர் கவலை

கண்டி தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் குறித்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகம் கோபி அனான் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளார்.

மத, இன அடிப்படையில் மக்களைப் பிரிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (ஐ-7)

# 'பிரா' இயக்கத் தலைவர் நீர்கொழும்பில் கைது!

கொழும்பு, ஜன. 29

தெற்கில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொலைகளின் சூத்திரதாரியெனக் கூறப்படும் 'பிரா' இயக்கத்தலைவர் சரத் டி சில்வா நீர்கொழும்பில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு நவீன சந்தைக் கட்டடத்தில் பொதுத் தொலைபேசி நிலையத்தில் வேறு ஒருவருடன் தொலைபேசியில் அவர் உரையாடிக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் கைதானமை தொடர்பான தகவலை பொலிஸார் வெளியிட மறுத்துள்ள போதும், அவரது சட்டத்தரணி அவர் கைது செய்யப்பட்டமையை உறுதி செய்துள்ளார்.

இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும் போது தெற்கில்நடந்த பல கொலைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்து வெளியாகலாம் என்று அவரின் சட்டத்தரணி தெரிவித்தார்.

சரத் டி சில்வா கைது செய்யப்படும் போது அவரிடம் ஜெரால்ட் சில்வா என்ற பெயரில் அடையாளஅட்டை இருந்ததாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (ஐ-10-21-8)

## புலிகள் இருவர் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 29

வவுனியா செக்கட்டிப் புலவு என்னும் இடத்தில் கடந்த திங்கள் காலை 9 மணியளவில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவர் உயிரிழந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி தாக்குதலில் தமது தரப்பில் கவிதன் (கணபதிப்பிள்ளை உதயகுமார்— வவுனியா) பலியானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## வலயம்-2 பாடசாலைகளுக்கு வழங்கிய இலவசப் பாட நூல்கள் மாணவருக்குப் போதாது!

வலிகாமம் தெற்கு, ஜன 29

யாழ். குடாநாட்டில் உள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வருடத்துக்கான இலவசபாடநூல்கள் கடந்தவாரம் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் கடந்த வாரம் கப்பல் மூலம் இலவசபாட நூல்களைத் தருவித்து கல்விக் கோட்டங்கள் ஊடாக பாடசாலை அதிபர்களிடம் புத்தகங்களை ஒப்படைத்திருந்தது.

பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ள போதிலும் வலயம் இரண்டில் உள்ள பாடசாலைகளுக்கு மிகச் சொற்ப அளவிலேயே பாடநூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

விநியோகத்துக்குத் தேவையென கேட்கப்பட்ட தொகையில் மூன்றிலொரு புத்தகங்களே கோட்டங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளமையால் நூல்களை எந்த வகையில் மாணவர்களுக்குப் பங்கிட்டு விநியோகிப்பது எனத் தெரியாது அதிபர்கள் தடுமாறுவதாகக் கூறப்படுகிறது. (ஐ-152)

## படையினர் ஒருநாள் சம்பளம் வழங்குவர்

கொழும்பு, ஜன. 29

கண்டி தலதாமாளிகை புனரமைப்புக்கு இராணுவத்தினர் தங்கள் ஒருநாள் சம்பளத்தை வழங்க முன்வந்துள்ளனர்.

இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க ஏ. எப். பி. செய்தி நிறுவனத்திற்கு இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ-21)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 06 — 1922

உதிர்வு: 30 — 12 — 1997

### அமரர் பொன்னையா வெற்றி உடையார் (அண்ணாவியார் அம்மான்)

பண்ணாக பதிவாழ்ந்து பண்ணோடு இசைபாடி
பரமனடி சேர்ந்த எங்கள்
அன்பின் உருவே! அம்மான் எனும் உறவே!
உன் உருக் காணாது உவகையை உதறிவிட்டோம்
மாலை வேளையானதும் உங்கள் மலர்ந்த முகம்
மனதை வாட்டுதையா!
அருகிருந்து அன்புக் கதைபேசிய நாளை
நாம் எண்ணி ஏங்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்னாரின் பாசமுள்ள இளைஞர்கள்.
பண்ணாகம்.

(52865)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்வநாயகம் தங்கக்கிளி (கிளி)

பிறப்பு: 26—11—1963

இறப்பு: 30—12—1997

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் வந்து கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள். கடித மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகள்.

கணவன், தகப்பன், மைத்துனர்கள்,
பிள்ளைகள், சகோதரர்கள்

செட்டியகுறிச்சி,
தொண்டைமானாறு.

(சி/ 2716)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாநகரசபை

### பொது அறிவித்தல்கள்

வரியிறுப்பாளரின் வசதி கருதி, 1998 ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை 10% கழிவுடன் செலுத்துவதற்கான கால எல்லை 06—02—1998 வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவே இத்திகதிக்குள் இவ்வருடத்துக்கான வரியைச் செலுத்தி உரிய கழிவைப் பெற்றுக் கொள்ளும்படி வரியிறுப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1998 ஆம் ஆண்டுக்கான அறிவித்தல்கள் இதுவரை கிடைக்கப்பெறாத வரியிறுப்பாளர்கள் மாநகராட்சி மன்றத்தின் சோலைவரிக்கிளை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தமது அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 27 01.1998

(சி/2734)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

### அமரர் பொன்னையா வெற்றி உடையார்

தோற்றம்: 10 - 06 - 1922

மறைவு: 30 - 12 - 1997

அனைவராலும் அன்பொழுக அம்மான்
என்றழைக்கப்பட்டு
அனுதினமும் முருகன் அடி தொழுது அவர் தொண்டு
செய்து

அமரராகிய அண்ணாவியாருக்கு
அருள்மிகு விசவத்தனை முருகன் எட்டாந்திருவிழா
அன்பர்களின் அஞ்சலிகள். விசவத்தனை முருகனாலய
பூந்தோட்டமும்

எட்டாந் திருவிழா சபையும்-நீவிர்
வளர்த்த தமிழர் மரபு நாடகக் கலையதுவும்
இங்கே தவித்து நிற்க
நீங்கள் மட்டும் வானகம் சென்றதேனோ?
உங்கள் ஆத்ம சாந்திக்கும்,
இழப்பால் தவித்து நிற்கும் குடும்பத்தவர்க்கும்
விசவத்தனை முருகப் பெருமானை இறைஞ்சும்:

அருள்மிகு விசவத்தனை முருகன்
எட்டாம் திருவிழா சபையினர்,
பண்ணாகம், சுழிபுரம்.

[52939]

# நேரகாலத்துடன் வாக்களிக்குமாறு
# தேர்தல் ஆணையர் கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 29

இன்று நடைபெற உள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலுக்கான வாக்கெடுப்பு முற்பகல் 7 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு முடிவடையும். தமது வாக்குகளைப் பதிவு செய்வதற்கு காலையில் இயன்ற அளவு நேரகாலத்தோடு சம்பந்தப்பட்ட தமது வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லுமாறு சகல வாக்காளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது —

தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

வாக்காளர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. அதை நீங்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டுவருதல் உதவியாயிருக்கும். விநியோகப் பிரச்சினைகளின் காரணமாக சில வாக்கெடுப்பு அட்டைகள் கிடைக்கப் பெறாமல் இருக்கலாம். இதனால் எவரும் வேதனையடையத் தேவையில்லை. நீங்கள் உங்களது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்குச் சீட்டொன்றைக் கேட்டுப் பெறலாம். நீங்கள் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டிருந்தால் நீங்கள் இத்தேர்தலில் வாக்கொன்றை அளிக்கலாம்.

உங்களிடம் அடையாள அட்டையொன்றிருந்தால் அதனை நீங்கள் உங்களுடன் வைத்திருத்தல் உதவியாயிருக்கும். உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு அட்டையொன்றோ அல்லது ஆளடையாள அட்டையொன்றோ வாக்களிப்பதற்கு அவசியமானதொன்றல்ல என்பதை தயவுசெய்து கவனிக்குக. ஆளொருவர் வாக்காளரொருவராகத் தேருநர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்பது மட்டுமே அவசியமானதாகும். நீங்கள் யாவரும் தேசிய ஆளடையாள அட்டையையோ அல்லது வேறு ஆளடையாள அட்டையையோ கொண்டுசெல்லல் கள்ள வாக்களிப்பைத் தவிர்க்க கூடியதாக விருக்கும் என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகின்றேன்.

கடமையிலுள்ள தேர்தல் பணியாளர்களும் பொலிசாரும் உங்களுக்கு உதவுவதற்காகவே அங்குள்ளனர். வாக்கெடுப்பு நிலையங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட்டுள்ள அறிவித்தல், கட்சிகளின் குழுக்களின் பெயர்களையும், வேட்பாளர்களின் பெயர்களையும் இலக்கங்களையும் தருகின்றது. இது விசேடமாக வேட்பாளர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள தொடர் எண்களை ஞாபகப்படுத்திக் கொள்ள உதவும்.

கட்சி, குழுவொன்றுக்கு வாக்கொன்றை அளித்துவிட்டு, நீங்கள் விரும்பும் அதே கட்சியைச் சேர்ந்த ஒன்று இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்களுக்கு மூன்றுக்கு மேற்படாதவாறு விருப்புகளை அடையாளம் செய்யும் உரிமை உங்களுக்கு உண்டு.

நீங்கள் வாக்கையும் விருப்புகளையும் அடையாளம் செய்த பின்னர் வாக்கெடுப்பு நிலையத்தைச் சுற்றித் திரியாமல். அதனை விட்டு நீங்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றீர்கள். சட்ட அதிகாரிகளுக்கு இது உதவியாயிருக்கும்.

இது தொடர்பான உங்கள் ஒத்துழைப்பு இன்றியமையாதது— எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## நீர்வேலிவடக்கு வாக்காளருக்கு ஊரெழுவில் நிலையம்

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த ஒரு பகுதி வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையம் ஊரெழுவில் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுமார் இரண்டு மைல் தூரம் செல்ல வேண்டிய நிலை வாக்காளர்களுக்கு ஏற்பட்டுள்ளது,

நீர்வேலி — புன்னாலைக் கட்டுவன் வீதிக்கு வடக்கே வதிபவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே நேரத்தில் இவ்வீதிக்குத் தெற்குப் பக்கம் வதிபவர்களுக்குரிய வாக்களிப்பு நிலையம் நீர்வேலியிலேயே அமைக்கப்படவுள்ளது. (ஐ-154)

## சண்டிலிப்பாயில் சேர்ந்து இயங்கும் பாடசாலைகள்

சண்டிலிப்பாய், ஜன. 29

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரிவிலுள்ள இரு பாடசாலைகள் இதுவரை இயங்காத நிலையில் மூடப்பட்டுள்ளன.

மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலயம், பெரியவிளான் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலைகளுமே இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

இதேவேளை இப் பிரிவிலுள்ள சில பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு பாடசாலையில் செயற்பட்டு வருகின்றன. மாதகல் சென். ஜோசவ் மகாவித்தியாலயம், மாதகல் சென். தோமஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளும் மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் ஒன்றிணைக்கப்பட்டு தற்போது இயங்கி வருகின்றன.

இதே வேளை இளவாலை றோமன் கத்தோலிக்க த.க. ஆண்கள் பாடசாலையில் மாரீசன் கூடல் றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை, சிறுவிளான் கனக சபை வித்தியாலயம் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. (ஐ-135)

## கொலையுண்ட 2 எம். பிக்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜன. 29

படுகொலை செய்யப்பட்ட இரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தனா ஆறு இலட்சம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஈ. எச். மஹ்றூப் ஆகிய இருவருக்குமே இந்த நஷ்டஈடுவழங்கப்பட்டது

புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் வழங்கப்படும் இந்த நஷ்ட ஈட்டை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் வழங்கினார்.

தங்கத்துரை குடும்பத்தின் சார்பில் அவரது மகன் அகிலனும், மஹ்றூப் குடும்பத்தின் சார்பில் அவரது சகோதரரான மஜீத்தும் அவற்றைப் பெற்றுக்கொண்டனர். இவ் வைபவத்தில் அமைச்சின் செயலாளர் எம். எம். ஜுனைட், புனர்வாழ்வு. புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் எம். எச். எம் ஸல்மான் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)

## ஆறு பாடசாலைகளுக்கு கணனி வழங்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜன. 29

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள ஆறு பாடசாலைகளில் கணனிக் கல்வியை ஆரம்பிக்கு முகமாக கணனிகளை வழங்குமாறு சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் உயர் அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துமகாவித்தியாலயம், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை ஆகியவற்றுக்கே கணனிகள் வழங்கப்பட வேண்டும் என்று யாழ். வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் பிரதிக் கல்விப் பணிப்பாளரினால் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-135)

## இருபாலைகானான் ஆலயத்தில் சுதந்திர பொன்விழா ஆராதனை

யாழ்ப்பாணம், ஜன. 29

இலங்கையின் சுதந்திரப் பொன்விழாவையொட்டி விசேட ஆராதனை ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இருபாலை கானான் ஜெப ஆலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 511 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் ஜி எம். றொக்வூட் கலந்து கொண்டு உரையாற்றினார்.

'இலங்கை சுதந்திரம் அடைந்து 50ஆவது ஆண்டை கொண்டாடும் இவ்வாண்டில் சிங்கள — தமிழ் மக்கள் ஒன்றாக, சகோதரர்களாக வாழக் கூடிய நிலை உருவாக வேண்டும். சமாதானம் ஏற்பட சகலரும் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும்.

'நாட்டில் வாழும் சகலரும் ஒருவரை ஒருவர் மதித்து சகோதரத்துவத்துடன் வாழ முன்வர வேண்டும்' — என்று பிரிகேடியர் றொக்வூட் தமிழில் உரையாற்றுகையில் கூறினார்.

கானான் ஜெப ஆலயத்தின் ஸ்தாபகர் ஏ. பி. ஜெபநாயகம் விசேட ஆராதனையை நடத்தினார்.

இவ்வைபவத்தில் 51 ஆவது படையணிக்கு உட்பட்ட படைப் பிரிவுகளின் அதிகாரிகள் பங்கு பற்றினர் (ஐ-3)



தேவாலய ஆராதனையில் கலந்து கொண்ட பிரிகேடியர் ஜீ. எல் றொக்வூட் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## கல்வி அமைச்சு தீர்மானம்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பொதுப் பரீட்சைகளை நடத்த வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதலில் ஆண்டு ஐந்து, ஆண்டு எட்டு ஆகியவற்றிற்கான பொதுப் பரீட்சைகளை விரைவில் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கென பரீட்சைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-103)

# சிவிலியன்கள் மீதான தாக்குதல் சகித்துக் கொள்ள முடியாதது

## கண்டி தாக்குதல் குறித்து மன்னிப்புச் சபை

ஜெனிவா, ஜன. 29

சிவிலியன்களை ஆயுதக் குழுக்கள் வேண்டுமென்றே கொலை செய்வது மனித உரிமைகளை மீறும் செயலாகும். எந்தச் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் இது சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

கண்டி தலதா மாளிகை குண்டுத்தாக்குதலில் பத்து பொது மக்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச் சபை வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புத்தரின் புனித தந்தம் வைக்கப்பட்டுள்ள புனித ஸ்தலத்திற்கு பக்தர்கள் வழிபாட்டிற்கு சென்ற வேளை கடந்த ஞாயிறு காலை இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தலதா மாளிகைக்கு வழிபடச் சென்றவர்களே கொல்லப்பட்டுள்ளார்கள்.

கொலையுண்டவர்களில் ஐவர் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள எம்பிலியப் பிட்டியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். 2 வயதுக் குழந்தை ஒன்றும் ஒரு வயது சிசு ஒன்றும் தலதா மாளிகையில் பலியானவர்களில் அடங்குகின்றனர்.

மோதல்களின் போது சர்வதேச மனிதாபிமான அரங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள கோட்பாட்டை மீறியது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை மிகவும் கவலை கொண்டுள்ளது.

இந்தக் கோட்பாட்டின் பிரகாரம் சகல தரப்பு ஆயுதபாணிகளும் எப்பொழுதும் சிவிலியன்களையும் இராணுவ இலக்குகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். சிவிலியன்களை எந்த வேளையிலும் இராணுவ இலக்குகளாக்கக் கூடாது.

தமது படையினர் எப்போதும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை குறிப்பாக ஜெனிவா ஒப்பந்தத்தின் 3-வது சரத்தையும் மேலதிக ஒப்பந்தத்தையும் மதித்து நடக்கிறார்கள் என்பதை தமிழீழ விடுதலைப் புலிகள் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது. (ஐ-5)

## செஞ்சிலுவைக் குழுவும் கண்டன அறிக்கை

கண்டி தலதா மாளிகையில் சிவிலியன்கள் வேண்டுமென்றே கொல்லப்பட்டதனை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த தாக்குதல் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் விதிகளை மிக மோசமாக மீறும் செயலாகும்.

கண்டி தலதா மாளிகையில் இடம் பெற்ற குண்டுத்தாக்குதலைக் கண்டித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஜெனிவாவிலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கண்டி தலதாமாளிகை மீது இம் மாதம் 25 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 13 பொது மக்கள் கொல்லப்பட்டும் 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர். இத்தாக்குதலினால் இலங்கையில் மிகப்புனிதமான பௌத்த விகாரை சேதமாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் விதிகள் சிவிலியன்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தடை செய்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. பிரஸ்தாப சட்டம் மிக குறிப்பாக கலாசார சின்னங்களையும் மற்றும் வணக்க ஸ்தலங்கள் மீது தாக்குதல் நடத்துவதையும் தடைசெய்கின்றது.

இது போன்ற நடவடிக்கைகளில் இனிமேலும் சிவிலியன்கள் இலக்கு வைக்கப்படாதிருக்கும் வகையில் மனிதாபிமானச் சட்டவிதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையப் பாதுகாப்பு

# விமானப் படையினரிடம்

கொழும்பு, ஜன. 29

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பாதுகாப்பு நேற்று முன்தினம் விமானப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான ஓடுபாதை, பிரதான நுழைவாயில், வாகனங்கள் நிறுத்தும் பகுதி ஆகியன விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விமான நிலையக் கட்டடப் பாதுகாப்பு விமானப் படையினரிடம் ஒப்படைக்கப்படவில்லை. அது தொடர்பான அறிவிப்பு வெளியாகவில்லை.

(ஐ-3-10-21)

## விவசாய சம்மேளன கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜன. 29

சீடா நிறுவனம் சுழற்சி முறையான கடனடிப் படையில் வழங்கவிருக்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களில் இருபது இயந்திரங்களை தமது பிரிவிலுள்ள 20 விவசாய சம்மேளன உறுப்பினர்களான விவசாயிகளுக்கு வழங்கி உதவுமாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவர் சி. க. முதலியார் உடுவில் சமநலச் சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## ஆதீனத்துக்கு தொலைபேசி வசதி அளிக்க கோரிக்கை

திருநெல்வேலி, ஜன. 29

நல்லூரிலுள்ள நல்லை ஆதீனத்திற்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ். சமானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுசந்த மென்டிஸுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீனத்தில் இந்து சமய நிறுவனங்களின் செயற்பாடுகளும், வைபவங்களும் அடிக்கடி இடம் பெற்று வருகின்றது. அத்துடன் பல்வேறு தமிழ் கலை, கலாசார கூட்டங்களும் இங்கு தான் நடத்தப்பட்டு வருகின்றன. ஆகவே முன்னுரிமை அடிப்படையில் நல்லை ஆதீனத்திற்கு தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியது அவசியம்—என்று மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## மீனவர்களுக்கான கடன் உதவித் திட்டம்

நெல்லியடி, ஜன. 29

யாழ். மாவட்டத்திலுள்ள மீனவர்களின் நலன் கருதி, 55 கோடி ரூபா செலவில் கடற்றொழில் அபிவிருத்தி திட்டம் ஒன்று கடற்றொழில் கூட்டுறவுச் சங்க ரீதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தின் பிரகாரம் 7 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளும், 35 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரங்களும் கடன் அடிப்படையில் கிடைக்கவுள்ளன.

அடுத்த மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இத்திட்டத்தில் 55 கோடி ரூபாவும், நன்கொடையாகவே, கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படுமென்றும், இதனை சங்கங்கள் மீனவர்களுக்கு சுழற்சிமுறையில் கடன் அடிப்படையில் வழங்க முடியும் என்றும், வடக்குக்கிழக்குகடற்றொழில் அபிவிருத்தி ஆலோசகர் திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

மேலும், கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தில் அனைத்து மீனவர்களையும் இணைக்கும் பணியும் அடுத்த மாதம் நடைமுறைப் படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-109]

## ஆசிரியருக்கு பயிற்சி

நெல்லியடி, ஜன. 29

யாழ். கல்வி வலயம் 2 இன் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் புதிய ஆசிரியர்களுக்கான திசைகோள் பயிற்சி வகுப்பு கடந்த 27 ஆம் திகதி கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியிலும் ஆரம்பமாகியுள்ளது.

(ஐ-190)

# முக்கிய 3 புலி உறுப்பினர்கள் கொழும்புக்குள் ஊடுருவலாம்

### முல்லைத்தீவில் இருந்து வந்தனர்

கொழும்பு, ஜன. 29

கடந்த காலங்களில் கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் மற்றும் தாக்குதல்களை நெறிப்படுத்திய மற்றும் அவற்றிற்கான தகவல்களைச் சேகரித்தவர்கள் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த 3 மூத்த உறுப்பினர்கள் அண்மையில் முல்லைத்தீவில் இருந்து கொழும்பு வந்துள்ளனர் என இரகசியப் பொலிசார் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

நாதன், சுப்பிரமணியம், சாந்திகுமார் அல்லது திருக்குமாரன் என்ற மூவருமே கொழும்பு வந்துள்ள புலிகள் என உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

16-11-92 இல் காலிமுகத் திடலில் கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோவின் படுகொலைக்கான திட்டத்தை சந்திரமோகன் அல்லது சந்திரன் என்பவரே தீட்டினார் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

20. 10. 95 இல் மேற்கொள்ளப்பட்ட கொலன்னாவ மற்றும் ஊருகொடவத்த எண்ணெய்க் குதம் மீதான தாக்குதல் மற்றும் ஈ. பி. டி. பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதி ஆகிய திட்டங்களைத் தீட்டியவர்களில் பொன்னக்கோன் விமலநாதனும் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல வன் செயல்களுக்குத் திட்டம் திட்டவே இந்த மூவரும் கொழும்பு வந்துள்ளனர் எனச் சந்தேகிக்கும் பாதுகாப்புத் துறையினர் அவர்களைத் தேடி வலை விரித்துள்ளனர்.

இதற்கிடையில் சந்தேகத்திற்குரிய இந்த மூவரின் புகைப்படங்கள் நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

# மேலும் சில சம்பவங்கள் குறித்து

# கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். தேர்தல் தொடர்பான வன்முறைகளைக் கண்காணிக்கும் தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் செவ்வாய்க்கிழமை வரை மொத்தம் 40 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் பிந்திய முறைப்பாடுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது —

(வியாழன்) நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலில் இடம் பெறக்கூடிய வன்செயல்களைக் கண்காணிக்கும் தேர்தல் வன்செயல் கண்காணிப்பு நிலையம் தனது செயற்பாடுகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமானது எனக் கருதுவதுடன் தேர்தல் மற்றும் பிரசாரம் என்பன அமைதியாகவும், ஒழுங்கான முறையிலும், நியாயமான முறையிலும் இடம்பெறுவதை பாதிக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை வரவேற்கிறது.

தேர்தல் தொடர்பாக இடம்பெறும் வன் முறை, நேரடி அல்லது மறைமுக அச்சுறுத்தல், மிரட்டுதல், பலாத்காரம். உதாரணமாக சுவரொட்டிகளை சேதப்படுத்துதல் அல்லது, வேட்பாளர்களின் உடைமைகளை சேதப்படுத்தல் அல்லது தலையிடுதல் போன்றன பலாத்காரப் பிரயோகம் எனக் கருதப்படும்.

சம்பவங்கள்

யாழ்ப்பாண வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் நெடுந்தீவுச் சம்பவங்கள் தொடர்பாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் முறையிட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட சம்பவங்களில் 3 சம்பவங்களில் வன்முறை புரிந்த நபர்களின் கட்சிச்சார்பு என ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியும் ஒரு சம்பவத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஒரு சம்பவத்தில், யாழ். மாநகராட்சி மன்றத்திற்கான ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் மோசஸ் எட்வேட் என்பவர் 23/5 மத்திய கிழக்கு வீதி, குருநகர் என்ற விலாசத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை என்பவரது இல்லத்துக்குச் சென்று அந்தோனிப்பிள்ளையினதும், அவரது மனைதும் வாக்காளர் அட்டைகளை எடுத்துக் கொண்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் கே. பிரேமச்சந்திரன் தேர்தல் கண்காணிப்பு நிலையத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இன்னுமோர் சம்பவத்தில் நெடுந்தீவிற்கான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் பி. லிங்கநாதன் சுவரொட்டிகளில் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி தார் பூசி அழித்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார். ஊர்காவற்றுறையில் இருந்து தாம் பயணம் செய்வதற்காக அமரத்திருந்த படகின் உரிமையாளரை அணுகியதன் மூலம் புளொட் உறுப்பினர்கள் ஊர்காவற்றுறையில் இருந்து பயணம் செய்வதைத் தடுத்துள்ளதாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் மற்றொரு சம்பவம் குறித்து முறையிடப்பட்டுள்ளது.

படகு உரிமையாளர் கந்தையா இச் சம்பவம் இடம் பெற்றதை ஏற்றுக் கொண்டுள்ளதுடன் இந்நோக்கில் தாம் புளொட் உறுப்பினர்களிடமிருந்து முற்பணம் பெற்றுக் கொண்டிருந்ததாகவும் அதனை திருப்பி கொடுத்துவிட்டதாகவும் கூறினார். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நெடுந்தீவுத் தலைவர் மோகன் இக் குறிப்பிட்ட படகு ஏற்கனவே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் அமர்த்தப்பட்டிருந்த தாகக் கூறினார்.

மேற்கூறப்பட்ட இவ்விரு சம்பவங்களிலும் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது நெடுந்தீவில் புதிதாக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையத்திற்கோ முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படாததே.

சாவகச்சேரியில் இரு சம்பவங்களும், ஊர்காவற்றுறையில் இரு சம்பவங்களும், யாழ்ப்பாணத்தில் மற்றொரு சம்பவமும் குறித்து இறுதியாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இருமுறைப்பாடுகள் ஈ. பி. டி. பி. அமைப்பாலும், இரு முறைப்பாடுகள் சுயேச்சைக் குழுவாலும், மற்றைய முறைப்பாடு பொதுமகன் ஒருவராலும் செய்யப்பபட்டுள்ளது.

தென்மராட்சி பிரிவு ஈ. பி. டி. பி. தலைவரான பி. ஜி. வசந்தன் சாவகச்சேரி பொலிஸில் செய்த முறைப்பாட்டில் கொடிகாமம் பகுதியில் 27 ஆம் திகதிபிற்பகல் ஐந்து பேருடன் தான் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம் புளொட் அமைப்பைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவ்விடத்தில் இருந்து வெளியேறுமாறு கேட்டதாகத் தெரிவித்துள்ளார்.

பி. ஜி. வசந்தன் சாவகச்சேரி பொலிஸில் செய்த மற்றொரு முறைப்பாட்டில், சாவகச்சேரி பிரதேசசபைக்கு புளொட் சார்பில் போட்டியிடும் அன்ரன் என்பவர் தாம் பிரசாரம் செய்து கொண்டிருந்த இடத்துக்கு வந்து [illegible] வெளியேறுமாறு கேட்டார். அன்ரன் பயணம் செய்த வாகனத்தில்

ரி 56 துப்பாக்கி கண்ணுக்கு படும் வகையில் வைக்கப்பட்டிருந்தது'' என்று தெரிவித்துள்ளார்.

26 ஆம் திகதி நள்ளிரவு தேர்தல் பிரசாரம் உத்தியோக பூர்வமாக முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் இடம் பெற்ற இச் சம்பவங்கள் மூலம் இரு தரப்பும் தேர்தல் சட்டத்தை மீறியுள்ளதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

யாழ். நாவலர் வீதியில் வசிக்கும் வி. கருணாகரன் என்னும் ஆசிரியர் செய்த முறைப்பாட்டில், இனங் காணப்படாத ஒரு கட்சி உறுப்பினர்கள் தமது வீட்டுக்கு வந்து மூன்று பேரின் வாக்காளர் அட்டைகளை பெற்றுச் சென்றுள்ளனர். 1995 ஆம் ஆண்டில் மரணமான பொன்னம்பலம், ஈஸ்வரன், எஸ். பொன்னம்பலம் ஆகியோரினதும், 1983 ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டில் வசிக்கும் த. ஈஸ்வரன் என்பவரினதும் வாக்காளர் அட்டைகளையே பெற்றுச் சென்றனர்.

ஊர்காவற்றுறையில் சுயேச்சைக் குழுவில் வேட்பாளராகப் போட்டியிடும் வி. தேவராசாவின் சகோதரி புலேந்திரராஜா பரமேஸ்வரி செய்துள்ள முறைப்பாட்டில், ஈ. பி. டி. பி. உறுப்பினர்கள் கடந்த 25 ஆம் திகதி தமது இரு சகோதரிகள், மருமகன், 5 பிள்ளைகள் ஆகியோரை எமது இருப்பிடத்தில் இருந்து வெளியேறுமாறு கேட்டனர். பயம் காரணமாகபொலிஸில் புகார் செய்ய முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண் மறுநாள் தெரிவித்த முறைப்பாட்டில் முதல்நாள் சம்பவம் குறித்து பொலிஸில் முறைப் பாடு செய்யக்கூடாது என்று ஈ.பி. டி. பி. உறுப்பினர் தம்மை அச்சுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார் — என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தையற் பயிற்சி அடுத்தமாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ். பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்திப் பகுதியினரால் நடத்தப்படவுள்ள இலவச தையற் பயிற்சி வகுப்புகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

24 - 01 - 1998 இல் நடைபெற்ற மேற்படி பயிற்சி வகுப்பிற்கு தெரிவு செய்வதற்கான நேர் முகப் பரீட்சையில் தெரிவானோருக்கான நியமனக் கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை யாழ். பிரதேச செயலகத்தில் அறிய முடியும்.

(ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட இடைவெளியின் பின்னர் — 1983 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் — சுமார் பதினைந்து வருடங்களுக்குப் பின்னர் — உள்ளூராட்சி சபைத் தேர்தலை இன்றைய தினம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முந்திய தேர்தலில் தெரிவான பிரதிநிதிகள் தமது பதவிகளை ஏற்கவில்லை. அதனால் உள்ளூராட்சி நிர்வாகம் அரச அதிகாரிகளாலேயே இத்தனை வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றது.

இதில் ஒரு மாற்றம் தேவை; மக்கள் பிரதிநிதிகளினால் அவை நிர்வகிக்கப்பட வேண்டும் என்ற வாதத்தில் உண்மை இருக்கவே செய்கிறது. எனினும் தேர்தல் ஒன்று நடைபெறக்கூடிய சூழ்நிலை உண்டா, அதற்கு உகந்தாக மக்களின் வாழ்க்கை நிலை இயல்புக்கு வந்து விட்டதா என்றால்; இல்லை. மக்கள் தேர்தல் வேண்டும் என்று விரும்பிக் கேட்கவில்லை. இதனை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் கூறுக் கொண்டுள்ளன; ஒப்புக் கொண்டுள்ளன.

எனினும் தேர்தல் இன்று நடைபெறுகிறது; நடத்தப்படுகிறது. இது தம்மீது திணிக்கப்பட்ட தேர்தலாகவே மக்கள் கருதுகிறார்கள். அதனால் விருப்பமின்றி, உணர்வு பூர்வமாக இல்லாமல், தேர்தல் நடக்கிறதே வாக்களிக்க வேண்டியுள்ளதே என்ற இரண்டு பட்ட மனநிலையுடனேயே அவர்கள் இன்றைய தேர்தலை எதிர் கொள்கிறார்கள்.

நாம் படும் பாட்டுக்குத் தேர்தல் ஒரு கேடா என்று ஆரம்பத்தில் கேட்டவர்கள், எப்படியோ ஒரு தேர்தல் நடைபெறப் போகிறது என்ன செய்வது என்ற நிலைக்கு இப்போது வந்துள்ளார்கள்.

தேர்தல் ஒன்று நடைபெறுவதால் உள்ளூராட்சி அபிவிருத்தி உண்டாகி விடுமா என்றால் அதுவும் இல்லை, அத்தகைய எதிர்பார்ப்பு மக்களிடமும் இல்லை; போட்டியிடும் கட்சிகளும் தமது பிரசாரங்களின் போது அதனை ஓரளவு ஒப்புக் கொண்டுள்ளன.

எனினும் அரசாங்கம் தேர்தலை இங்கு நடத்தியே ஆக வேண்டும் என்று விடாப்பிடியாக நின்று தனது முடிவைச் செயலாக்குகிறது.

யாழ்ப்பாணத்தைத் தனது ஆணைக்குள் கொண்டு வந்ததனை அரசு தனது சாதனையாகக் கருதுகிறது. அதனைத் தொடர்ந்து இங்கு ஜனநாயகம் மீண்டுள்ளது என்று காட்டவும் விரும்புகிறது. அதன்மூலம் அரசுக்கு பல வரப்பிரசாதங்கள் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மாவிட்ட சுதந்திரத்துக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், அமைதி சார்ந்த வாழ்வுக்காகவும் இந்த தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா தமது செய்தி ஒன்றில் கேட்டுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான ஒரு தீர்வு காணப்படாது இவ்வேளையின் மேற்போந்தவை தன்மை அந்தஸ்தையும் என்று எதிர்பார்க்க முடியாது என்பதனை யாழ். மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

வாக்காளர்களில் அரைவாசிப் பேர் இல்லாத நிலையில், மரணமானவர்களுக்கும் வாக்காளர் அட்டைகள் வந்திருக்கும் சூழ்நிலையில், நேர்மையான சுதந்திரமான தேர்தல் நடைபெறுமா? போட்டியிடும் கட்சிகள் தமக்குள் துண்டுப் பிரசுரச் சண்டை போட்டுக் கொள்கின்றனவே, தேர்தல் முடிந்த பின் என்னாகுமோ? என்ற கேள்விகளுடனும் இன்றைய தேர்தலை மக்கள் எதிர் கொள்கிறார்கள்.

எப்படியோ, முடிவு செய்ய வேண்டியவர்கள் வாக்காளர்களே.

### ஒரு தமிழ் தலைமைத்துவத்தை உருவாக்க

# தமிழ் கட்சிகள், அமைப்புக்களுடன் பேச புலிகள் முன்வர வேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எவ். அழைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

''இன்றைய சூழ்நிலையில் தமிழ் தலைமைத்துவம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்காக தமிழ்க் கட்சிகளுடனும், தமிழ் அமைப்புக்களுடனும் பேச விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும்.''

மேற்கண்டவாறு ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது.

அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

நீண்ட எமது போராட்டத்தில் மக்கள் மிகவும் களைப்படைந்து விட்டார்கள். யுத்தத்தால் பாதிக்கப்படாத மக்களே இல்லை. மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது பெற்றார், உற்றார், உறவினர் என்பதுடன் அவர்களது சொத்து, சுகம், வாழ்க்கை எல்லாவற்றையும் இழந்த மனிதர்களையே நாம் அன்றாடம் சந்திக்கின்றோம்.

யாரும் 2 கொத்து அரிசி இனாமாகக் கொடுக்கின்றார்கள் எங்கு போனால் அன்றாட வயிற்றுப் பாட்டுக்கு ஏதாவது வாங்கலாம் என்ற அளவுக்கு மக்கள் பஞ்சைகளாய், பராரிகளாய் போயுள்ளார்கள்.

மக்களின் சுயகௌரவம் யாவும் இழக்கப்பட்டு அவர்கள் நடைபிணங்களாக வாழும் நிலைமை எழுபதுகளிலும், எண்பதுகளிலும் தமது உரிமைகளுக்காக வீறு கொண்டெழுந்த மக்கள், இன்று முழு மன உணர்வுகளும் பாதிக்கப்பட்டு என்னவாவது நடந்துவிட்டு போகட்டும் என்ற மன உணர்வுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இது தனிநாட்டுக்கான போராட்டத்துக்கோ, அல்லது தமது உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்துக்கோ, எந்த விதத்திலும் சாதகமான சூழ்நிலை அல்ல. மக்களைப்புறந்தள்ளி, அந்நியப்படுத்தி எம்மால் எந்தக் கோரிக்கையையும் வென்றெடுக்க முடியாது. போராட்டம் மீதும், தமிழ்த் தலைமைகள் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்ததே இதற்கு அடிப்படைக்காரணம் ஆகும்.

இந்நிலையில் எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமாயின் சகல தமிழ்க் கட்சிகள் மத்தியிலும் ஐக்கியம் அவசியம். தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ்க் கட்சிகளும், தமிழ் மக்களும் இது தொடர்பாகக் கலந்துரையாட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம்.

தமிழ் மக்களின் தலைமைத்துவம் என்பது வெற்றிடமாகவே உள்ளது இது தனி ஓர் இயக்கத்தால் நிரம்பக் கூடியதாக இல்லை. தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படக்கூடிய வகையில் எமது செயற்பாடுகள் அமைய வேண்டும். இந்த வகையில் பலஸ்தீன தேசிய சபை போன்று, தமிழ் மக்களின் பிரதிநிதிகளை (கட்சிகள், இயக்கங்கள், பொது அமைப்புக்கள், புத்திஜீவிகள்) உள்ளடக்கிய சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் இச்சபை தமிழ் மக்களின் இனப்பிரச்சினையைக் கையாள்வதற்குத் தகுதி உடைய சபையாக அமைய வேண்டும்.

தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் அமைக்கப்படக் கூடிய இச்சபையானது தமிழ் மக்களுக்கு தலைமைத்துவத்தை கொடுக்கக் கூடியஒரு சபையாக இருக்கும் என்பதுடன் இழந்து போய் இருக்கும், சர்வதேச ஆதரவையும் இச்சபை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

மக்களின் தாங்க முடியாத கஷ்டங்கள், துன்பங்கள் ஒரு புறம், அரசும், புலிகளும் தொடர்ந்து நடத்தி வரும் யுத்தம் மறு புறமுமாகஇருக்கும் இன்றைய சூழ்நிலையில், மக்களுக்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் அரசியல் தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை எவரும் உணரலாம்.

இந்த வகையில் இப்படியான ஒரு சபை தொடர்பாகவும் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பாகவும் தமிழ்க் கட்சிகளுடனும், தமிழ் அமைப்புக்களுடனும் பேசுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வரவேண்டும் என ஈ. பி. ஆர். எல். எவ். அழைப்பு விடுகின்றது.

மக்கள் மத்தியில் தமிழ்க் கட்சிகள் தொடர்பாக ஓர் அச்சமற்ற சூழல் ஒன்று உருவாக நாம் எல்லோரும் எமது பங்களிப்பை செலுத்தவேண்டும் என்பதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்கு கொள்ளும் பட்சத்தில் மாத்திரமே தமிழ் மக்களின் முழுமையான தலைமைத்துவத்தை கொண்ட அமைப்பாக இது இருக்க முடியும்.

எமது 20 வருடப் போராட்டத்துக்கும், இழப்புக்களுக்கும், தியாகங்களுக்கும் ஓர் அர்த்தம் இருக்கவேண்டுமென ஈ. பி ஆர். எல். எவ். விரும்புகின்றது எமது குறுகிய கட்சி நலன்களிலும் விட முழுத் தமிழ் மக்களின் நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஈ பி. ஆர். எல். எவ். விரும்புகின்றது. எனவேதான் சகலரும் இணைந்த ஒரு தமிழ்த் தலைமைத்துவத்தை உருவாக்க சகலரையும் முன்வருமாறு ஈ. பி. ஆர். எல். எவ். அழைப்பு விடுக்கின்றது.

இப்படி தெரிவிக்கப்பட்டது.

# தலதாமாளிகை குண்டு வெடிப்பு விசாரணைகள் தொடருகின்றன

### வாவிக்குள் கிடக்கும் பாகங்களை மீட்க முயற்சி

கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன.

குண்டு வெடித்த இடத்தில் பூர்வாங்க ஆய்வுகளை நடத்திய அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு திரும்பிவிட்டனர்.

குண்டின் பாகங்கள் போகம்பரை வாவியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வீழ்ந்துள்ளன.

ஆய்வுகூட பரிசோதனைகளை ஆரம்பிக்க அவற்றை கண்டெடுக்க வேண்டும் என்று அரசாங்க பகுப்பாய்வாளர் வை. மகேசன் தெரிவித்தார்.

இதுவரை கிடைத்த தகவலின்படி இந்தக் குண்டின் நிறை சுமார் 200 கிலோவாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கொழும்பு கலதாரி ஹோட்டல், மத்திய வங்கி ஆகிய இடங்களில் வெடித்த குண்டுகளைப் போல கண்டியில் வெடித்த குண்டு அவ்வளவு சக்தி வாய்ந்தது அல்ல என்று அரசாங்க பகுப்பாய்வாளர் தெரிவித்துள்ளார். (இ-3 21)

# காலியில் 21 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஜன. 29

காலியில் நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் 21 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இராணுவம், கடற்படை, பொலீஸார் ஆகியோர் நேற்று முன்தினம் இரவு கூட்டாக நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

காலி நகரத்திலுள்ள கடைகளும், வீடுகளும் படையினரின் தேடுதல் நடவடிக்கைக்கு உள்ளாகின.

நான்கு மணித்தியாலங்கள் இந்தத் தேடுதல்கள் நீடித்தன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தற்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (இ-7)

## நேற்றைய ஆட்டத்தில் கொழும்பு அணி வெற்றி

கொழும்பு, ஜன. 29

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணிக்கும், கொழும்பு மாவட்ட கிரிக்கெட் அணிக்கும் இடையில் நேற்று நடந்த போட்டியில் கொழும்பு மாவட்ட கிரிக்கெட் அணி வெற்றிபெற்றது.

கொழும்பு சி சி சி. விளையாட்டு மைதானத்தில் நடந்த இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். அணி 40 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 145 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ். அணியின் முன்னணி இளம் துடுப்பாட்ட வீரர்களான ரி. கௌரிபாகனும், எஸ். கார்த்திக்கும் இறமையாக ஆடி முறையே 52, 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

அடுத்து ஆடிய கொழும்பு அணி 33 ஓவர்களில் இரு விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (இ-3)

## தெரிவு அணிக்கான பயிற்சிகள்

யாழ். உதைபந்தாட்ட லீக்கில் இணைந்துள்ள கழகங்களில் இருந்து தெரிவு அணி ஒன்றை தெரிவு செய்வதற்கான முன்னோடியான பயிற்சிகள் எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டு மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளன.

இத்தெரிவுக்காக இணைந்த கழகங்களில் அங்கம் வகிக்கும் வீரர்களை அனுப்பி வைக்குமாறு கழகச் செயலாளர்களை சங்கத்தின் தலைவர் எஸ். ரி. கணநாதன் கேட்டுள்ளார். (இ-3)

## சனசமூக நிலையங்களுக்கு ஆணையாளர் அறிவுறுத்தல்

திருநெல்வேலி, ஜன. 29

சன சமூக நிலையங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களை நடத்தும்போது அப்பகுதி பிரதேச செயலர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், நகரசபை பிரதேச சபை செயலாளர், கிராம அலுவலர் ஆகியோரை அழைத்து அவர்களில் வருகை தருவோர் முன்னிலையிலேயே கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் [illegible] கிருஷ்ணசாமி தமது பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச, நகர, மாநகர மற்றும் மாவட்ட மட்டத்தில் இவ் வருடம் சிறந்த சன சமூக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவிருப்பதால் பல்வேறு அபிவிருத்திப்பணிகளிலும் ஈடுபட்டு மக்களுக்கு அதி உச்ச அளவிலான சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

### நாளை

தை 17

வெள்ளிக்கிழமை

திதி: துதியை முற்பகல் 9.09 வரை.

நட்சத்திரம்: சதயம் பின்இரவு 1.42 வரை

கரிநாள்

சுபநேரம்: 6.36-8.06

ராகுகாலம்: 11.06-12.36

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## ஒருவர் கைது

வடமராட்சி கிழக்கில்படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது நவரட்ணராசா (வயது 26) என்பவர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்)
கும் அனுப்பப்பட்டுள்ளன.

பொலீஸாரும், தேர்தலில் பணியாற்றும் அதிகாரிகளும் அனுப்பப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து வந்த 800 அதிகாரிகளுடன் யாழ். திணைக்களங்களைச் சேர்ந்த 800 அதிகாரிகளும் இப்பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

யாழ். செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் 24 நிலையங்களில் இன்று இரவு 8 மணிக்கு வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமாகும்.

வாக்கு எண்ணி முடிக்கப்பட்டாலும், தேர்தல் முடிவுகள் கொழும்பில் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு வெளியிடப்படும்.

முதலாவது முடிவு இரவு 10 மணியளவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேநேரம் — குடாநாட்டில் உள்ள சகல திணைக்களங்களும் இன்று இயங்க வேண்டும் என்றும் —

தேர்தல் பணிக்கு செல்லாத ஊழியர்கள் அனைவரும் மாலை 4.45 மணி வரை அலுவலகத்தில் இருக்கவேண்டும் என்றும் தேர்தலுக்கு பொறுப்பான அதிகாரி மகிந்த தேசப்பிரிய கேட்டுள்ளார் (இ-3-5)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்)
நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடி ஆராய்ந்த பின்பே இந்த முடிவை எடுத்தது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் குழு கூடிய சமயம், அரசின் அரசமைப்பு திருத்த யோசனை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அரசின் யோசனையை நிராகரிப்பது என்றும்—

மத்தியில் இருந்து அதிகாரத்தை பரவலாக்கும் வகையிலான மாற்று யோசனை ஒன்றை நாடாளுமன்ற தெரிவுக்குழு முன் சமர்ப்பிப்பது என்றும்— அங்கு முடிவு செய்யப்பட்டது.

புதிய மாற்று யோசனைகளாக தெரிவிக்கப்பட உள்ள சில முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ செனட் சபையை உருவாக்க வேண்டும்.

★ இரு உப-ஜனாதிபதிகளை நியமித்தல். அப்பதவிகள் சிறுபான்மை இனத்தவர்களுக்கு வழங்க வேண்டும்.

★ இன விகிதாசாரத்தை கருத்தில் கொண்டு அமைச்சரவையில் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல்.

(இ-3-7)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்)
தேர்தலை முன்னிட்டு வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல மக்களுக்கு விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

15 ஆண்டுகளுக்கு பின்னர் முதற் தடவையாக ஒரு மாநகரசபை, 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு 284 அங்கத்தவர்களைத் தெரிவு செய்ய மக்கள் தமது வாக்கைச் செலுத்த விருக்கிறார்கள்.

டிசம்பர் 16 ஆம் திகதிக்கும் 23 ஆம் திகதிக்குமிடையில் வழங்கப்பட்ட காலப்பகுதியில் 5 அரசியல் கட்சிகளும், 9 சுயேச்சைக் குழுக்களும் தேர்தலில் போட்டியிட நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தன.

அவர்கள் தமது பிரசாரத்தை 34 நாளகள் மேற்கொண்டு 26ஆம் திகதி தமது பிரசாரத்தைப் பூர்த்தி செய்தனர்.

யாழ். குடாநாடு படையினரால் விடுவிக்கப்பட்டு கடந்த இரண்டரை வருட காலமாக மக்கள் சுதந்திரமாகவும், பீதியின்றியும், பயமுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமலும் வாழ்வதற்கான சுமுகமான சூழ்நிலையை உருவாக்கப் படையினர் கடுமையாகப் பாடுபட்டு வந்தனர்.

இந்த உள்ளூராட்சித் தேர்தல், நாம் பெற்ற பெறுபேறுகளைப் பாதுகாப்பது மட்டும் அல்ல சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்தவும் உதவப் போகிறது.

இலங்கையின் சுதந்திர பொன்விழாக் கொண்டாட்டங்கள் நடப்பதற்கு ஒரு வார காலம் இருக்கும் போது நடைபெறும் இத் தேர்தல் மகிழ்ச்சிகரமானதுடன் ஜனநாயக நடைமுறைகளில் மக்களை இணைப்பதற்கு உதவுகிறது.

வடபிராந்திய இராணுவத் தளபதி என்ற ரீதியில் நான் வாக்காளர்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால் பங்கள் விருப்பப்படி சுதந்திரமாக வாக்களியுங்கள் என்பதே.

சமாதானத்தை விரும்பும் வாக்காளர்களின் பாதுகாப்புக் கருதி சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன,

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மியான்கல்...

(முதலாம் பக்கத் தொடர்)
படையினர் காயமடைந்தனர் என்றும்—

தமது தரப்பில் லெப்டினன்ட் தீசநாதன் (கணபதிப்பிள்ளை நாகரத்தினம்) களப்பலியானார் என்றும் — புலிகளின் குரல் அறிவித்தது.

18 நிமிட நேரம் நீடித்த இத்தாக்குதலையடுத்து முகாம் தங்கள் சட்டுப்பாட்டில் வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலின் போது உதவிக்கு வேறு படையினர் வருவதைத் தடுக்கும் வகையில் வாழைச்சேனை, மியான்குளம் தேக்கங்கேணி முகாம்கள் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் ரி. கே. எல். எம். ஜி — ஒன்று, ரி 56 — 8, 60 எம். எம். மோட்டார் — ஒன்று, குண்டு — 93 மற்றும் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரவைகள் உட்பட பல ஆயுத தளபாடங்களை கைப்பற்றியதாக புலிகளின் குரல் அறிவித்தது

இத்தாக்குதலில் 7 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

11 படையினர் காயம் அடைந்தனர் என்றும்—படை வட்டாரங்கள் தெரிவித்தன (இ-21-3)

## சங்குப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்)
புலிகளின் நிலைகளும்— கிபிர் விமானத்தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டதாக பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது

பூநகரிக்குச் சமீபமாக சங்குப்பிட்டி — கல்முனைப் பகுதியில் உள்ள புலிகளின் முகாம் மீது நேற்று முன்தினம் மாலை 5-30 மணியளவில் கிபிர் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-17)

# இளம் பெண் உட்பட 10பேர்

# அநுராதபுரத்தில் விடுவிப்பு

### யாழ்ப்பாணத்தில் கைதாகியவர்கள்

கொழும்பு, ஜன. 29

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்டு நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் இளம் பெண் ஒருவர் உட்பட 10 பேர் நேற்று அநுராதபுரம் நீதிவான் டி. லொஸ்ராவால் விடுதலை செய்யப்பட்டனர்.

அநுராதபுரம் நீதிவான் முன் 26 இளைஞர், யுவதிகள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒரு பெண் உட்பட 10 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

மற்றொரு பெண் உட்பட 16 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

15 பேர் 2 ஆயிரத்து 500 ரூபா பிணையிலும்—

ஒருவர் 7 ஆயிரத்து 500 ரூபா பிணையிலும்— செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மனித கௌரவத்துக்கான அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ஸாகிர் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரானார். (இ-3)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்)
இந்த சம்பவத்தையொட்டி இலங்கை அரசும், மக்களும் பெரும் அதிர்ச்சி அடைந்திருப்பதால் புத்த பெருமானின் புனித சின்னத்துக்கு கௌரவம் அளிக்கும் வகையில் சுதந்திர பொன் விழாக் கொண்டாட்டங்களை கண்டியில் நடத்துவதில்லை என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இருந்த போதிலும், இந்த சுதந்திரப் பொன் விழாவின் தேசிய, சர்வதேச முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு கொழும்பில் இந்த வைபவங்களை நடத்துவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது

அதே நேரம் ஏற்கனவே திட்டமிட்டபடி எதிர்வரும் 4 ஆம் திகதி தலதாமாளிகையில் சகல சமய அனுஷ்டானங்களையும், ஏனைய வழிபாட்டுத் தலங்களில் சமய நிகழ்ச்சிகளையும் நடத்துமாறு அரசாங்கம் கேட்டுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-21)

# கப்பலில் வந்த பயணிகள் நல்லூரில் சத்தியாக்கிரகம்

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்ட 900 பயணிகள் நேற்று நல்லூரில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று சுமார் 900 பேர் ஆறு பஸ்களில் யாழ். நகருக்கு யாழ். செயலக அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் மாலை அழைத்து வரப்பட்டனர்.

ஊரடங்கு வேளை நெருங்கியதையடுத்து இவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

அப்பகுதிக்கு அச்சமயம் படையினர் சென்று பயணிகளை வெளியே செல்ல அனுமதி மறுத்தனர்.

அங்கு தடுத்துவைக்கப்பட்ட பயணிகளின் உடைமைகள் வைக்கப்பட்டிருந்த லொறிகளின் திறப்புக்களையும் படையினர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

அங்கிருந்தவர்களை படையினர் வெளியே செல்ல அனுமதிக்காததையடுத்து. அவர்கள் நேற்றுக் காலை ஆலய முன்றலில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

பின்னர் பஸின் தலையீட்டையடுத்து நேற்று நண்பகல் அளவில் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-103-86)

# 6 லொட்ஜுகள் நேற்று கொழும்பில் மூடப்பட்டன

கொழும்பில் சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சிகளை நடத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் கொழும்பு நகரில் உள்ள 6 லொட்ஜுகள் நேற்று படையினரால் மூடப்பட்டன.

கிரான்ட்பாஸ், பொரள்ளை, புறக்கோட்டை, பம்பலப்பிட்டி பகுதிகளில் அண்மையில் திறக்கப்பட்ட லொட்ஜுகளே மூடப்பட்டவை ஆகும்.

அத்துடன் அந்த லொட்ஜுகளின் உரிமையாளர்கள் உட்பட அங்கு தங்கியிருந்த 30 பேரை படையினர் கைது செய்துள்ளனர்.

கொழும்பில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளின்படி நடைபாதை வியாபாரிகள் அகற்றப்பட்டுள்ளனர். (இ-3)

## பிரபா உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்)
பிடிகள் அதிகமாக இருக்கும் பூந்தமல்லிச் சிறைச்சாலையில் நீதிபதி இந்தத் தீர்ப்பை நேற்று வாசித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கைத் தீவிர விசாரணையில் எடுத்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்திகேயன் இந்தக் கொலை தொடர்பாக இந்திய நாடு வகித்த நிலை நிரூபிக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

இந்த வழக்கில் பிரகடனப் படுத்தப்பட்ட குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டவர்களில் விடுதலைப் புலிகள் தலைவர் வே பிரபாகரனும் ஒருவராவார் எனப் புலனாய்வுக்குழுவின் தலைவர் கார்த்திகேயன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே திட்டமிட்டு இக் கொலையை புரிந்ததாக நேற்று வெளியிடப்பட்ட தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி இரவு சென்னைக்கு அருகில் உள்ள ஸ்ரீ பெரும் புதூரில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த ராஜீவ் காந்தி தற்கொலைக் குண்டுதாரி ஒருவரால் படுகொலை செய்யப்பட்டிருந்தார் என்பது தெரிந்ததே. (இ-3-7)

## பிரதிப் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)
இவரது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அனேகமாக அவர் அதனை ஏற்க மாட்டார் என்றும் —

இராஜினாமாக் கடிதத்தை திரும்பப் பெறும்படி அனுருத்த ரத்வத்தவை வலியுறுத்துவார் என்றும் — கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் முடிவு நேற்று இரவு வரைவெளியாகவில்லை.

தலதாமாளிகை குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்ற உடனேயே இராஜினாமா செய்வது பற்றி தாம் தீர்மானித்ததாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அனுருத்த ரத்வத்த குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் இத்தகைய பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதிக்கும் இந்த நாட்டின் சமாதானத்தை விரும்பும் மக்களுக்கும் ஆதரவாக நின்று நெருக்கடியை தீர்த்து வைப்பதற்கும் —

தலதா மாளிகையை புனரமைக்க நடவடிக்கை எடுப்பதற்கும் — உதவுவது தமது தலையாய கடமை என்று கருதியதனால் தமது தீர்மானத்தை அமுல் செய்வதை தாமதித்ததாக அவர் தமது இராஜினாமாக் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தற்சமயம் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் [illegible] புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. எனது மனச் சாட்சிப்படி நடந்து கொள்வதற்கு இது தருணமாகும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த அரசும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் தாமும் நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அனுருத்த ரத்வத்த குறிப்பிட்டார்.

முன்னைய ஜனாதிபதிகள் செய்தது போல் நாங்கள் எமது பொறுப்பை ஒரு போதும் தட்டிக்கழிக்க முற்படவில்லை.

ஒவ்வொரு பிரஜையும் தனது சொந்தப் பாதுகாப்பை தானாகவே கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் முன்னைய ஜனாதிபதிகள் தெரிவித்திருந்தார்கள்—

நாட்டு மக்கள் அனைவரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் பொறுப்பாகும்.

உலகில் இதற்கு முன்னர் காணப்படாத மிகவும் கொடுரமான இயக்கம் ஒன்றுடன் நாடு போரிடுகின்றது. இந்த எதிரியை தோற்கடித்து தீர்க்கமான வெற்றி ஒன்றை அடையும் வகையில் வீரம் மிக்க பாதுகாப்பு படையை வழிநடத்தி செல்லும் பூரண ஆற்றல் இந்த அரசுக்கு உண்டு.

இப்படி தமது ராஜினாமாக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)


## விற்பனைக்கு

வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன-புதிய

SANYO -3 LCP
COLOUR
PROJECTOR

உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
திரு. M சூரி
114,ஏ.வி. றோட்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(52930)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] 29-01-98 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org